வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

நவம்பர் 05 - 11 - 2014
பக்கம் 24
விலை 30/-



# நவலைப்பாய்ச்சல்






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலவு குறும்படம் பற்றிய சில குறிப்புகள்

### இல்வு- இதுதான் கதை

எதிர்காலம் பற்றிய நிறையக் கனவுகளோடு உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவி நிஷா. அழகானவள் என்பதால் வெளிநாட்டு மாப்பிள்ளை ஒருவரின் ஜாதகத்தோடு கல்யாணத்தரகர் ஒருவர் நிஷா வீட்டுக்கு வருகிறார். ஆரம்பத்தில் நிஷாவுக்கு இந்த வயதில் கல்யாணமா, அவளை வெளிநாட்டுக்கு ஒருபோதும் அனுப்பமாட்டேன் என அடம்பிடிக்கிறார் நிஷாவின் தந்தை. என்றாலும் கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்



# காத்திருப்புகளின் அர்த்தமின்மை

தானே.குடி, வெறி இல்லாத , குணமான மாப்பிள்ளை கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென தரகர் சொல்லி, அவர் மனதைக் கரைக்கிறார். அவரும் சம்மதிக்கிறார். பாடசாலையால் வரும் நிஷா, விடயம் அறிந்து கோபப்படுகிறாள். ஆயினும் வெளிநாட்டு வாழ்வும், மாப்பிள்ளையின் புகைப்படமும் அவளது முடிவில் சட்டென மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. திருமணத்துக்குச் சம்மதிக்கிறாள். வெளிநாட்டில் இருந்து வரும் மாப்பிள்ளை தினேஷும், நிஷாவும் காதலர்கள் போல் பழகி, தம்பதிகளாகின்றனர். அதுவரையும் நன்றாகப் போய்க்கொண்டிருந்த நிஷாவின் வாழ்வில் மெல்ல மெல்ல புயல் புகுந்து கொள்ளத் தொடங்கியது. முதலிரவன்றே தினேஷின் உதட்டில் சிகரெட் வாசனை அடிப்பதை நிஷா உணர்ந்து அதிர்கிறாள். பின்னர் நண்பர்களுடன் சேர்ந்து குடித்து விட்டு நிறை வெறியில் வரும் தினேஷுக்கும் நிஷாவுக்கும் தர்க்கம் நிகழ்கிறது. கடைசியில் நிஷாவை அடித்தே விடுகிறான் தினேஷ். அதன் பின் இருவருக்குமிடையே விரிசல் விழத் தொடங்குகிறது. விசா முடிந்து லண்டன் சென்ற தினேஷ் அதன் பின் நிஷாவுடன் தொடர்புகளைக் குறைக்கிறான். ஒரு கட்டத்தில் நிஷாவுக்கும் தினேஷுக்கும் முற்றாகத் தொடர்பே இல்லாமல் போய் விடுகிறது. ஆனாலும் அதை நிஷா வெளிக்காட்டுவதில்லை. தன்னை லண்டனுக்கு கூப்பிடும் அலுவலை தினேஷ் பார்க்கிறான் என்றே வீட்டாருக்குச் சொல்கிறாள். ஒருநாள் தன்னுடைய சிறுவயது தோழனைக் கோவில் நிஷா சந்திக்கிறாள். அவனும் இப்போது லண்டன் தான். அவன் தினேஷின் படத்தைப் பார்த்துவிட்டு, தினேஷுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்ட செய்தியைச் சொல்கிறான். இடிந்து போகிறாள் நிஷா. தன் தந்தையிடம் பல்முறை இந்த உண்மையைச் சொல்ல முனைந்தும் பிறகு அதைத் தள்ளிப் போடுகிறாள். ஒருநாள் எப்படியும் சொல்லிவிடுவதென்று அவள் முடிவெடுக்க, எதிர்பாராதவிதமாக அவள் தந்தைக்கு ஹார்ட் அட்டாக் வந்து விடுகின்றது. உடனடியாக அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறார். அங்கு அவருக்கு ஏற்கனவே முன்னரும் ஒரு தடவை ஹார்ட் அட்டாக் வந்த விடயம் தெரிய வருகிறது. அப்போதுதான் நிஷாவின் தந்தையின் நண்பர் உண்மையைச் சொல்கிறார். நிஷாவின் தந்தைக்கும் தினேஷுக்கு ஏற்கனவே திருமணமான விடயம் தெரிந்து, அதன் போதே அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்துள்ளது. ஆக தன்னால் தந்தையின் மனம் நோகக் கூடது என்று நிஷாவும், மகளின் வாழ்க்கை பறிபோன விடயத்தை அவளுக்குச் சொன்னால் தாங்கமாட்டாள் என்று தந்தையும் தங்கள் மனதுக்குள்ளேயே உண்மையைப் பூட்டி வைத்த விடயம் தெரிய வர, நிஷாவும் தந்தையும் கண்ணீரோடு ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்வதோடு படம் முடிகிறது.



ஈழத்தில் குறும்படத்துறையில் படைப்புகளின் வருகை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அதிகரித்த படியே இருக்கிறது. நம் பிக்கை தரக்கூடிய புதிய படைப் பாளிகளின் வருகையும் நிக ழவே செய்கிறது. ஈழத்தில் சினிமாத் துறையோ அல்லது குறும் படத்துறையோ சொல்லக்கூடிய அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்காததால் தமிழகத்தில் இருப்பது போன்ற திரைத்துறை நேர்த்தியோ அல்லது படைப் பாளிகளுக்கான வழிகாட்டல் களோ கிடைப்பதில்லை. குறும்படத்துறையில் இயல்பாக எழும் ஆர்வத்தை மட்டுமே முதலீடாகக் கொண்டே ஈழத்தில் இந்தத் துறையில் புதியவர்கள் நுழைகிறார்கள். தாம் பார்த்த குறும்படங்களையே அவர்கள்

> **ஈழத்தில் சினிமாத் துறையோ அல்லது குறும்படத் துறையோ சொல்லக்கூடிய அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்காததால் தமிழகத்தில் இருப்பது போன்ற திரைத்துறை நேர்த்தியோ அல்லது படைப்பாளிகளுக் கான வழிகாட்டல்களோ கிடைப்பதில்லை. குறும்படத் துறையில் இயல்பாக எழும் ஆர்வத்தை மட்டுமே முதலீடாகக் கொண்டே ஈழத்தில் இந்தத் துறையில் புதியவர்கள் நுழைகிறார்கள்.**

ஆதர்சமாகக் கொள்வதால் அவர்களின் படைப்புகளும் சில வரையறைகளுக்குள் சுருங்கி விடுகின்றன. அதனை விட இப்போது குறும்படங்கள் சமூக வலைத்தளங்கள் மூலமே அதிகளவு பார்வையாளர்களைச் சென்றடைவதால், எந்த மாதிரியான படைப்புகளுக்கு வரவேற்பு அதிகம் என நாடி பிடித்து அதே சாயலில் அல்லது அதே மையக்கருத்தை குறும்படமாக்கவே பலரும் விரும்புகிறார்கள். ஏனெனில் அப்போதுதான் தங்கள் படைப்பு பலரைச் சென்றடைந்து. விரைவில் பிரபலம் ஆகலாம் என்றும் நினைக்கிறார்கள். அதனால் பெரும்பாலான ஈழத்துக் குறும்படங்கள் நமது மண்ணின் கதையைப் பேசாமல், தென்னிந்திய சினிமா வாசனையைப் பூசியபடி வலம் வருகின்றன்.

ஆனால் அந்த மாயைக்குள் சிக்காமல், நம் சமூகத்தில் இருக் கும் பிரச்சினை ஒன்றைப் பேச முற்படுகின்றது 'கானா வரோவின் இயக்கத்தில் வந்துள்ள இலவு குறும்ப டம். எந்தவித இடைச் செருகல்களும் இல்லாமல் சீராகப் பயணிக்கிறது திரைக்கதை. இதுவே படத்தின் பலவீனமாகவும் சில இடங்களில் அமைந்தும் விடுகிறது. அடுத்த காட்சி என்ன என்பதை எவரும் முதலே கணித்து விடக்கூடியதாக இருப்பதால், படத்தின் மீதான கவனப்புள்ளி திசைமாறிப்போய் விடுகிறது.

ஒவ்வொரு பாத்திரமும் பேசும் போது கமெரா அவர்களுக்காக காத்திருப்பதும் கோணத்தை மாற்றுவதும், சலிப்பை உண்டு பண்ணுகின்றது. எனினும் ஒளிப் பதிவு பல இடங்களில் கவனத்தை ஈர்க்கவே செய்கின் றது. பின்னணி இசையிலும், பாடலிலும் காட்டப்பட்டுள்ள அக்கறையும் வெளிப்படையாகத் தெரிகின்றது.


திரைக்கதை சில இடங்களில் சறுக்கினாலும் படம் முடியும் போது நம் சமூகத்துக்கு தேவையான ஒரு செய்தி சொன்ன திருப்தியை ஏற்படுத்தவே செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாத்

**அண்மையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதி மன்றம் நீக்கியுள்ளது. இந்தத் தீர்ப்பு வெளி வருவதற்குச் சில நாள்கள் முன்பு தான் எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க லண்டன் பயணத்தை மேற்கொண்டு திரும்பியிருந்தார்.**



# திறக்கப்படும் தேர்தல் கடைகள்

தேர்தல் திருவிழாவை முன்னிட்டு பல கடைகள் அரச தரப்பினரால் திறக் கப்பட்டுள்ளன. இவற்றில் வாழ்க்கைச் செலவு உயர்வு, இன வாதம், தனிநபரின் சாதனைகள், குறைபாடுகள் எனப் பலவிதமான பொருள்களும் அமோகமாக விலை போகவுள்ளன. இந்த வியாபாரத்தில் வெற்றிபெற கொலைகள் உட்பட வன்முறைகள், இலஞ்சம், அதிகார துஷ்பிரயோகம் என்பன தாராளமாகவே கட்ட விழ்த்து விடப்படும்.

அண்மையில் வெளியிடப்பட்ட வரவு-செலவு திட்டமும் இந்தக் கடை விரிப்பின் ஒரு பகுதியென எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. எதிர்க் கட்சியினர் இதை ஒரு பெரும் ஏமாற்று என்று கூறுகின்றனர். அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, சமயாசமய ஊழியர்களை நிரந்தரமாக்குவது போன்ற சில கவர்ச்சிகரமான திட்டங்கள் இந்தப் பட்ஜெட்டில் முன் வைக்கப்பட்டுள்ளன என்பது உண்மைதான். எனினும் நாட்டுக்கு அந்நியச்செலாவணியை ஈட்டித் தரும் மலையக மக்களோ, தனியார் துறை ஊழியர்களோ கவனிக்கப்படவில்லை. அதே வேளை, வடக்கு-கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு அவர்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகள் என்பன பற்றியும் இந்த பட்ஜெட்டில் எதுவுமேபேசப்படவில்லை.

இருப்பினும் அரச பணியாளர்களின் சம்பள உயர்வு என்பது கவர்ச்சிகரமானது என்பதை எவரும் மறுத்து விட முடியாது. ஏனெனில் மக்கள் மத்தியில் கருத்துருவாக்கத்தை சாதாரணமாக விதைப்பவர்கள் அவர்களே. எனவே இந்த வியாபாரத்தில் அரசாங்கத்துக்கு லாபம் கிட்ட வாய்ப்புண்டு.

ஆனால் தேர்தல் முடிந்த பின்பு எவர் ஆட்சிக்கு வந்தாலும் மெல்ல மெல்ல பொருள்களின் விலைகள் உயர்கின்ற வேளையில் வர்த்தகமானி அறிவிப்புக்கள் வெளிவரும். இதில் எரிபொருள்விலையேற்றம் என்பது லாபகரமானதாகும். அது போக்குவரத்து, பாவனைப் பொருள்கள், விநியோகம் என பல முனைகளில் ஆட்சி செலுத்துவதால் பிரகடனப் படுத்தப் படாமல் வாழ்க்கைச் செலவு உயர்வு தானாகவே ஏற்படும். மேலும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பது போன்ற காரணங்கள் காட்டப்பட்டு பல பொருள்களின் விலைகள் நேரடியாக அதிகரிக்கப்படும். ஒட்டு மொத்தத்தில் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை விட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு சுமையாக வந்து விடும்.

இது ஒரு வழமையான நடைமுறையாக இருந்த போதும் அது தொடர்பாக பெரிதாக யாரும் அலட்டிக் கொள்வதில்லை. சிறிய அளவிலேனும் சம்பளம் அதிகரிக்கப்பட்டு விட்டதேயென்றே திருப்திப்படுபவதை விட வேறு வழியில்லை.

இதைவிட இன்னொரு கடையும் உண்டு. இந்தக் கடை தான் மிகப் பிரபலமான கடை. இந்த வியாபாரத்தை நம்பியே இந்தத் தேர்தல் திருவிழாவில் பல கடைகள் திறக்கப்படுகின்றன. அது தான் இனவாதத்தை விற்பனை செய்யும் கடை.

ஏற்கனவே இந்தக் கடையில் நல்ல வியாபாரம் போனாலும் கூட, இப்போது புதிய முறையில் அலங்கரிக்கப்பட்டு பளபளப்பான முறையில் அலங்கரிக்கப் பட்டுள்ளது.எதிர்க்கட்சியும், அரசாங்கமும் போட்டி போட்டுக் கொண்டு இந்த இனவாத வியாபாரத்தில் இறங்கி விட்டனர். "புலம்பெயர் தமிழர்" எனக் கூவிக் கூவியே வாடிக்கையாளர்கள் அழைக்கப் படுகின்றனர்.

அண்மையில் விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கியுள்ளது. இந்தத் தீர்ப்பு வெளிவருவதற்குச் சில நாள்கள் முன்பு தான் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க லண்டன் பயணத்தை மேற்கொண்டு திரும்பியிருந்தார்.

உடனடியாகவே ஐரோப்பிய நீதிமன்றத் தீர்ப்புக்கும், ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் பயணத்துக்கும் முடிச்சுப் போட்டு கொழும்பெங்கும் சுவெராட்டிகள் ஒட்டப்பட்டன. அதாவது ரணில் விக்கிரமசிங்க லண்டனில் புலம் பெயர் தமிழர்களை சந்தித்து புலித் தடை நீக்கத்துக்கு ஆதரவு வழங்கினார் எனக்குற்றம் சாட்டப்பட்டது.

உடனடியாகவே ரணில் விக்கிரமசிங்க அதை மறுத்து விட்டார். அது மட்டுமன்றி புலம்பெயர் தமிழர்கள் தம்மைச் சந்திக்க விரும்பியதாகவும் ஆயினும் தான் அதற்கு மறுத்து விட்ட தாகவும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் பங்கு கொள்ள அமெரிக்கா சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு சந்தித்த புலம்பெயர் தமிழர்கள் யார் எனவும், ஏன் சந்தித்தார் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார் ரணில். அதாவது ஜனாதிபதியென்றால் என்ன எதிர்கட்சிகள் என்றாலென்ன புலம்பெயர் தமிழர்களைச் சந்திப்பது என்ற வகையில் ஒருவரை குற்றம் சாட்டியுள்ளார்.

புலம் பெயர் தமிழர்கள் இலங்கையில் பிறந்து இலங்கையில் வளர்ந்து பின்பு புலம்பெயர்ந்து சென்ற வெளிநாடுகளில் வாழ்கின்றனர். அவர்களின் பெற்றோரும், உறவினர்களும் இங்கு தான் வாழ்கின்றனர். அவர்களின் உழைப்பின் ஒரு பகுதி தான் இந்த நாட்டில் வீடுகளாக உயர்ந்துள்ளன. வாகனங்களாக வீதியில் ஓடுகின்றன. அதாவது அவர்கள் வெளிநாடுகளில் வாழும் இலங்கைப் பிரஜைகள்.அவர்களை ஜனாதிபதியோ எதிர்க்கட்சித் தலைவரோ சந்திப்பதில் தவறு இல்லைத் தான்.

ஆனால் புலம் பெயர் தமிழரைச் சந்திப்பது என்பது இனவாத அரசியலைச் தோற்கச் செய்து விடும் என பேரினவாத அரசியல் வாதிகள் எண்ணுகிறார்கள். அதனால் தான் அரச தரப்பினரும்,எதிர்க்கட்சியினரும் போட்டிபோட்டிக் கொண்டு சிங்கள மக்களிடம் தமிழ் மக்களையும், புலம்பெயர்ந் தோரையும் தேச விரோதிகளாகக் காட்டி இனக் குரோதத்தை தக்க வைத்து எதிர் வரும் தேர்தலில் அரசியல் வியாபாரம் செய்யப் புறப்பட்டுள்ளனர். அதாவது என்றுமே தங்கள் தேர்தல் வெற்றிகளுக்காக இன நல்லிணக்கம் ஏற்பட முடியாத ஒரு சூழலைத் திட்டமிட்டு உருவாக்கி வருகின்றனர்.


அண்மையில் அம்பாந்தோட்டையில் ஒரு மக்கள் சந்திப்பில் உரையாற்றி வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் "புலித்தடை நீக்கம் இலங்கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அதற்கு அரசாங்கம் தனியாக முகம் கொடுக்க முடியாது. எனவே அரசுக்கு ஆதரவாக, புலித் தடையை மீண்டும் ஏற்படுத்தக் கோரி மக்கள் திரண்டு எழ வேண்டும்" என்று கூறியுள்ளார். இதே வேளையில் விமல் வீரவன்ஸ "புலிகளுக்கு எதிராக முகம் கொடுக்க நோஞ்சான் தலைவர்களால் முடியாது . அஞ்சா நெஞ்சரான மஹிந்த ராஜபக் ஷவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதன் மூலமே சர்வதேச சதியை முறியடிக்க முடியும்" எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதாவது அரச தரப்பு தேர்தல் பரப்புரைக்கு புலிகளின் மீள் எழுச்சி ,புலம்பெயர் தமிழர்கள் என இரு விடயங்களையும் பிரதானமாக்கி இனங்களுக்கிடையே குரோதத்தை வளர்க்கவுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. அரசாங்கம் மட்டுமன்றி எதிர் கட்சியும் அதே பாதையில் தான் செல்லப் போகிறது என்பதும் திட்டவட்டமாக வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

தேர்தலை முன்னிட்டு வரவு-செலவு திட்டம், இனவாதம் என இரு கடைகள் திறக்கப்பட்ட போதிலும்,இதில் இனவாத வியாபாரமே முன்னிலை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயோ பெண்கள்...



ஈராக், சிரியாவில் தற்போது ஷியா முஸ்லிம் தலைவர்கள் ஆட்சி நடத்தி வருகின்றனர். இதை எதிர்த்து சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமிக் ஸ்டேட் (ஐ.எஸ்.) கிளர்ச்சிப் படை உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வருகிறது. இரு நாடுகளிலும் பெரும் பகுதி ஐ.எஸ். கட்டுப்பாட்டில் உள்ளது.

ஷியா முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகள், குர்து சிறுபான்மையின மக்கள் வசிக்கும் பகுதிகளை குறிவைத்து ஐ.எஸ். படை தாக்குதல் நடத்தி வருகிறது.

தற்போது அமெரிக்க உதவியுடன் குர்து படை வீரர்கள் ஐ.எஸ். படைக்கு எதிராகத் தீவிரமாகப் போரிட்டு வருகின்றனர். அண்மைக்காலமாக குர்து படைப் பிரிவில் பெண்கள் அதிகம் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

பெண்களின் கையால் உயிரிழந்தால் சொர்க்கத்துக்குச் செல்ல முடியாது என்பது ஐ.எஸ். படையினரின் நம்பிக்கை. அதனால் வீராங்கனைகளைப் பார்த்தால் கிளர்ச்சிப் படையினர் நேருக்கு நேர் சண்டையிடாமல் ஓடி விடுகின்றனர். இதையடுத்து குர்து படையில் வீராங்கனைகளுக்கு அதிக முக்கியத் துவம் அளிக்கப்பட்டு வரு கிறது.

குர்து பெண்கள் படைப் பிரிவுக்கு நாரின் அப்ரின் என்பவர் தலைமையேற்று வழிநடத்துகிறார். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட ஐ.எஸ். படையினரை கொன்று குவித்துள்ள அவருக்கு டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

அவரைப் போன்று ரெஹைனா என்ற குர்து பெண் போராளியும் நூற்றுக்கும் மேற்பட்டோரை சுட்டு வீழ்த்தியுள்ளார். அவர் கூறியபோது, எனது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக திருமணம் செய்து கொள்ளாமல் படையில் சேர்ந்து போரிட்டு வருகிறேன். எனது தியாகத்தின் மூலம் எங்கள் இனத்தின் எதிர்கால சந்ததியினர் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும். ஐ.எஸ். படை வீரர்களை நான் மனிதர்களாகவே மதிக்கவில்லை, அவர்கள் காட்டுமிராண்டிகள் என்று தெரிவித்தார்.

ஈராக், சிரியாவில் ஐ.எஸ். படைக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் களமிறங்கியிருப்பதால் அவர்களுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் ஐ.எஸ். வீரர்கள் போர்க்களத்தில் ரசாயன ஆயுதங்களை பயன்படுத்தத் தொடங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் பாக்தாத்தில் இருந்து 50 கி.மீற்றர் தொலைவில் உள்ள கிராமத்தின் மீது ஐ.எஸ். படை வீரர்கள் இரசாயன குண்டுகளை வீசியுள்ளனர். இவ்வாறு ஐ.எஸ் அமைப்பு இரசாயன ஆயுதங்களைப்பயன்படுத்துவதால் வரும் நாள்களில் இரு தரப்பிலும் பெரும் அழிவுகள் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது.

# இதற்கு தூக்கா?



பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றவரை கொலை செய்ததாகக் கூறிய பெண் ஒருவருக்கு ஈரானில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ரெய்ஹனே ஜப்பாரி என்ற இந்தப் பெண்ணை இன்று அதிகாலை தூக்கிலிட்டதாக ஈரான் செய்தி ஏஜென்சி தெரிவித்துள்ளது.

இந்தப் பெண் கற்பழிக்க முயன்றவரைக் கொலை செய்திருப்பதாகக் கோரியிருப்பது பொய் என்றும் முன்னாள் உளவுத்துறை ஏஜெண்ட் மோர்டெசா அப்துலாலி சர்பாந்தி என்பவரை இந்தப் பெண் திட்டமிட்டுக் கொலை செய்திருப்பது சாட்சியங்கள் மூலம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கோர்ட் கூறியிருந்தது.

கொலை செய்வதற்கு 2 நாள்கள் முன்னதாகவே கத்தியை கொலையாளி வாங்கியிருப்பது இது ஒரு முன் கூட்டியே திட்டமிட்டக் கொலை என்பதை ஐயமின்றி நிரூபித்துள்ளதாக கோர்ட் தனது தீர்ப்பில் கூறியிருந்தது.

ஜப்பாரி என்ற அந்த 27 வயது பெண்ணை மன்னிக்க முடியாது என்று கொலைசெய்யப்பட்டவரின் உறவினர்கள் கூறிவிட்டதால் இன்று காலை தூக்கிலேற்றப்பட்டார்.

ஆம்னெஸ்ட் இண்டெர்னேஷனல் மற்றும் மனித உரிமைகள் அமைப்பு தூக்கிலிடுவதை நிறுத்துமாறு நீதித்துறையிடம் கோரிக்கை வைத்திருந்தது. ஆனால் அதனால் ஒருவித பயனும் விளையவில்லை.

# பறவைகளுக்காக பட்டாசுக்குத் தடை

காதைப் பிளக்கும் குண்டு சத்தங்களும், துப்பாக்கி தோட்டாக்கள் பாயும் ஒலிகளும் காதில் விழுந்த அடுத்த நொடியே உயிர் மட்டும் மிஞ்சினால் போதும் என்ற உணர்வோடு நாம் மட்டுமல்ல நம் தேசத்தில் வாழ்ந்த ஐந்தறிவு உயிரினங்களும் கூட்டம் கூட்டமாக தப்பியோடினோம்.

ஆனால் அவற்றை எல்லாம் மறுநொடியே மறந்தது போல நம் உணர்வுகளை மாற்றி இன்று இன்ப, துன்பம் இரவு பகல் பாராது பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றோம். இதில் மனித குலம் மட்டும் மகிழ்ச்சியில் மிதக்க ஐந்தறிவு ஜீவன்கள் அன்று வேட்டுச்சத்தம் கேட்டு பயந்தோடிய உணர்வில் இருந்து மீளாது பட்டாசு சத்தம் கேட்டதும் உயிரைக்காக்க ஓடி ஒளிகின்றன.

ஒரு வேட்டுச் சத்தத்துக்கே இப்படியென்றால், நாள் முழுக்கப் பட்டாசு வெடிக்கும்போது அந்த உயிரினங்கள் எங்கே போய் ஒளிந்துகொள்ளும்?

வேட்டுச் சத்தம் கேட்டு பயந்தோடிய நாங்கள் இன்று அந்த உணர்வை மறந்த போதிலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கிராம மக்கள் இதை உணர்ந்து கொண்டுள்ளார்கள். இவர்களுக்குத் தீபாவளி உண்டு. ஆனால், பட்டாசு இல்லை.

தமிழகத்தில் 13க்கும் மேற்பட்ட பறவைகள் சரணாலயங்கள் இருந்தாலும், பறவைகளால் ஏற்படுகின்ற சத்தங்கள், வீதிகள் வீடுகள் என்று பாராது அவை இடுகின்ற எச்சங்கள் என எந்த விடயத்தையும் தொந்தரவாகக் கருதாமல் மக்களும், பறவைகளும் மிகவும் இணக்கமாக வாழும் ஊர் திருநெல்வேலி அருகேயுள்ள கூந்தங்குளம்.

தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய பறவைகள் சரணாலயத்தை கொண்டுள்ள இந்தக்கிராமத்தை தேடி வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பறவைகள், பழந்தின்னி வவ்வால்கள், கூழைக்கடாக்கள், மஞ்சள்மூக்கு நாரைகள், கொக்குகள் என அனைத்துப் பறவைகளையும் தொந்தரவு செய்யக்கூடாது என்ற சக உயிரினத்தை மதிக்கும் குணத்தைக் கொண்டவர்கள் இந்தக் கிராமத்தவர்கள். ஊரெங்கும் பறவைகள் கூடு கட்டி குஞ்சு பொரித்து வாழ்கின்றன.

இந்தப் பறவைகளைத் தங்களது குழந்தைகளைப் போல கருதும் இந்த ஊர் மக்கள் தங்கள் வீட்டிலும் வீதியிலும் உள்ள மரங்கள், குளங்கள், நீர்நிலைகள் என தமது கிராமத்தின் வளங்களைப் பறவைகளுடன் பங்கு போட்டுக்கொள்வதை இயல்பாக ஏற்றுக்கொள்கிறார்கள்.



அதனால் தான் இரவில் உணவு தேடிவிட்டு, பகலில் மரக்கிளைகளில் தொங்கி ஓய்வெடுத்து தூங்கும் வெளவால்களும் பகலில் உணவு தேடிவிட்டு தமது சொந்தங்களுடன் இரவில் தூங்கும் ஏனைய பறவைகளும் பட்டாசு வெடித்தால் அவை கலைந்து சென்று அடிபட்டு இறந்து போகவும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு என கிராம மக்கள்எண்ணுகின்றார்கள்.

அதிலும் குறிப்பாக தீபாவளி காலங்களில் வெளிநாட்டு பறவைகள் கூட்டம் கூட்டமாக தமது கிராமத்தைச் சுற்றிப் பார்க்க வருவதனால் அவற்றை விருந்தாளிகளாக ஏற்றுக்கொண்டுள்ளனர் இந்தக் கிராம மக்கள். பறவைகளை பயமுறுத்தி கலைக்கக் கூடாது என்ற கொள்கையில் எல்லோரும் பட்டாசு கொளுத்தி தீபாவளியைக் கொண்டாடும் போது தமது குழந்தைகள் ஆசைப்பட்டால் தமது விருந்தாளிகளுக்கு கேட்காத தூரத்துக்கு அழைத்துச் சென்று பட்டாசுகளை கொளுத்தி தமது பிள்ளைகளையும் மகிழ்விக்கின்றார்கள்.

இது இன்று நேற்று வந்த சம்பிரதாயம் அல்ல. பல தலைமுறைகள் கடந்தது என்பதை தமிழகத்தின் பல்வேறு மாவடங்களுக்கு சுற்றுலா சென்றவர்கள் சொன்ன கதைமூலம் அறியமுடிகின்றது.

திருவண்ணாமலை மாவட்டம் ராயண்டபுரம் கிராமத்திலுள்ள 2 அரச மரங்களிலும், ஒரு ஆல மரத்திலும் பழந்தின்னி வெளவால்கள் கூட்டம் கூட்டமாக வசிக்கின்றன. இந்த வெளவால்கள் வசிப்பது தங்கள் கிராமத்துக்கு நன்மை என்று இந்தக் கிராம மக்கள் நம்புகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, பக்கத்துக் கிராமங்களைச் சேர்ந்த சிலர், வெளவால்களைத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். அப்போது, ஒட்டு மொத்தமாக எல்லா வெளவால்களும் வெளியேறிவிட்டன. சில மாதங்களுக்குப் பிறகு, மீண்டும் அவை திரும்பி வந்ததிலிருந்து வெளவால்களுக்கு எந்தத் தொந்தரவும் நேராமல் பல தலைமுறை தலைமுறையாக பட்டாசு வெடிக்காது பாதுகாத்து வருகின்றனர்.

இவர்களது இந்த ஒன்றுக்கொன்று இணக்கமாக வாழ்வதும், இடத்தையும் அங்கிருக்கும் இயற்கை வளத்தையும் பகிர்ந்துகொள்வதும் இயற்கையைப் போற்றுவதற்கான உதாரணங்களாகத் திகழ்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம் வந்த பின்...



ஹரீஸ்

பதுளை கொஸ்லந்த மிரியாய பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற மண்சரிவுப் பேரனர்த்தம் பலரின் விழி நீரை கசிய வைத்திருக்கிறது. இப்பத்தி எழுதப்படும் போது சுமார் 300 பேர் காணாமல் போனதாகவும் 13 பேரின் சடலங்களே மீட்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தக் கோர அனர்த்தத்தில் லயன்களில் வசிக்கும் தமிழ் மக்களே அதிகம் சிக்கியிருக்கின்றனர் என அறிய முடிகின்றது. மண்சரிவு காலை 7.30 மணியளவில் இடம்பெற்றதால் 80க்கும் மேற்பட்ட சிறுவர்கள் அனர்த்தம் இடம்பெறும் போது பாடசாலையில் இருந்ததால் உயிர் தப்பியிருக்கின்றனர். அவர்கள் பாடசாலை முடிந்து வந்து பார்த்த போது, வீடு இருந்த இடம் வெறும் மண்மேடாகி இருக்க, அவர்களது உறவுகள் அந்த மண்மேட்டுக்குள் புதையுண்டு உயிரை விட்டிருந்தார்கள். தமது பெற்றோரின் சடலத்தை கூட காணமுடியாமல் அந்தப் பிள்ளைகள் அன்றைய பொழுதை அழுகையுடனேயே கழித்திருக்கின்றனர். சுமார் 6 லயன் குடியிருப்புகளை சேர்ந்த 155 வீடுகள் இந்த அனர்த்தத்தின் போது, மண்ணுக்குள் புதையுண்டிருக்கின்றன.

இலங்கை வரலாற்றில் மாபெரும் துயரங்களில் ஒன்றாக இந்த அனர்த்தம் பதிவாகியிருக்கிறது. பல பிள்ளைகள் அனாதைகள் ஆகியிருக்கின்றனர். ஆதரிப்பார் யாருமின்றி நிர்க்கதியாகியிருக்கின்றனர்.

அன்றைய நாள் இரவு கால நிலை சீரின்மை காரணமாக மீட்பு பணியில் ஈடுபடும் இராணுவத்தினரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மீட்பு பணிகள் இடை நிறுத்திவைக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அறிவித்திருந்தார். ஆனாலும் சிட்டிசன் திரைப்படத்தில் வரும் அத்திப்பட்டி கிராமம் போல அதிகாரிகளின் நிர்வாகத் தவறால் அழகிய மலையோரக் கிராமம் ஒன்று மண்ணோடு மண்ணாகி விட்டது. ஒரு பெரும் மண்சரிவு ஒட்டுமொத்தமாக ஒரு ஊரையே விழுங்கிவிட்டது. இதுவும்அத்திப்பட்டி போல வெளியுலகத் தொடர்பற்ற கிராமமாக இருந்திருந்தால் இலங்கையின் வரைபடத்தில் இருந்து கொஸ்லந்த மிரியாயவையும் அழிக்கப்பட்ட கிராமம் ஆக்கி, அதிகாரிகள் தமது தவறை மறைத்திருப்பார்கள்.

உண்மையில் இவ்வாறு நூற்றுக் கணக்கில் மனித உயிர்களைக் காவு கொண்ட மண்சரிவுக்கு தனியே இயற்கை மட்டுமே காரணம் அல்ல. ஆனால் இந்த அனர்த்தத்தை வெறும் இயற்கையின் சீற்றமாக மண் போட்டு மூடி விட பல தரப்புகள் மறை முக நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக தெரிகிறது.

அனர்ததம் இடம்பெற்ற உடனேயே உலங்குவானூர்தியை அனுப்பினோம். நிவாரணம் வழங்கினோம். படைகளை அனுப்பினோம் என அதிகாரத் தரப்பு மக்களின் துயர் துடைக்க ஏதோ வெட்டி வீழ்த்துவது போன்ற தோற்றப்பாட்டை கடந்த 29 ஆம் திகதி காட்டியிருந்தது. அனர்த்தங்களின் சிக்கியிருக்கும் மக்களை மீட்டெடுக்க ஜனாதிபதி உத்தர விட்டதாகவும்,உடனடியாக பாதுகாப்பு செயலாளர் கோத்தாபாய, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர உட்பட்ட அமைச்சர்களுக்கு ஜனாதிபதி இது தொடர்பில் தொலைபேசியில் அறிவுறுத்தியதாகவும் அரசு அறிவித்தது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சரும் ஜனாதிபதி சொன்ன உடனேயே சம்பவ இடத்துக்குச் சென்றேன். அனர்த்தத்தில் பதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரச அதிபரிடம் முதற் கட்டமாக 15 லட்சம் காசோலையை வழங்கினேன் என்று தன் கடமையுணர்வை பறைதட்டினார். அடுத்தடுத்து பல்வேறு அறிக்கைகள் வந்தபடியே இருந்தன. அடுத்தநாள் ஜனாதிபதி, அவரது மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் சம்பவ இடத்துக்கு நேரடியாக வந்து , ஹெலியில் வட்ட மிட்டு பார்த்துச் சென்றனர்.

இப்படி அரச தலைவரும், அமைச்சர்களும், அதிகாரிகளும் அனர்த்தம் நிகழ்ந்த இடத்துக்கு சென்றதையும், பார்வையிட்டதையும் விலாவாரியாகச் சொன்ன ஊடகங்கள் பலவும் இதன்போது மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைப் பெரியளவில் வெளிப்படுத்தத் தவறியிருந்தன. அத்தோடு அரச அதிகாரிகளின் அசமந்தமே இந்த அனர்த்தத்துக்கு முக்கிய காரணம் என்பதையும் அமுக்குவதற்கே பல ஊடகங்கள் பாடுபட்டன.

பதுளையில் மண்சரிவு இடம்பெற்ற பகுதி 2011 ஆம் ஆண்டே அனர்த்தம் ஏற்படும் பகுதியாக இனம்காணப்பட்டுள்ளது. இதன் உண்மைத்தன்மையை அப்போதைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சரும் இன்றைய பெருந்தோட்ட அமைச்சருமான மஹிந்த சமரசிங்க அனர்த்தம் இடம்பெற்ற தினத்தன்று ஏற்றுக்கொண்டிருக்கின்றார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் தெரியாத்தனமாகவே இந்த உண்மையைப் போட்டுடைத்திருக்கிறார்.

குறித்த பகுதி மண்சரிவு அனர்த்தப் பகுதியென ஏற்கனவே இனம்காணப் பட்டிருந்தது. அது தொடர்பில் கட்டட ஆய்வு நிலையம் ஏற்கனவே தோட்ட நிர்வாகத்தினருக்கு அறிவித்திருந்தது. ஆனாலும் நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை எனத் தெரியவில்லை. எனவே அது தொடர்பில் விசாரணை நடாத்தப் படும் என மஹிந்த சமரசிங்க தன்னையுமறியாமல் உண்மையை உளறிக் கொட்டியிருந்தார்.

அவரது ஒப்புதல் வாக்குமூலத் தின் படி, குறித்த பகுதி அனர்த்தம் இடம்பெறும் பகுதி என வெறுமனே காகித அறிவிப்பை அனுப்பியதோடு தமது கடமை முடிந்துவிட்டது என அதிகாரிகள் தூங்கி விட்டனர் போலும். இல்லாவிட்டால் தமது அறிவிப்பின் பின்னர் தோட்ட நிர்வாகம் அங்கிருந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம் செய்துவிட்டதா என்பதைக் கண்காணித்து உறுதி செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இவ்வளவு பெரியளவில் உயிரிழப்புகள் நேர்ந்திருக்காது. தமது அறிவுறுத்தல் தொடர்பிலான முன்னேற்றம் தொடர்பிலான செயற்பாடுகளை ஏன் கட்டட ஆய்வு நிலையமும், அனர்த்த முகாமைத்துவ நிலையமும் முன்னெடுக்கவில்லை? அதிகாரிகளின் கடமை வெறும் அறிக்கையிடலும் அறிவுறுத்தலும் மாத்திரமா? போன்ற சந்தேகங்கள் தவிர்க்க முடியாமல் எழுகின்றன.

ஒருவேளை வேறு போக்கிடம் இல்லாததால் ஆபத்து என்று அறிவித்தல் கிடைத்த பின்னரும் அந்தப்பகுதி மக்கள் தொடர்ந்தும் அங்கேயே தங்கியிருந்திருக்கக் கூடும். ஆனால் அப்படி மக்கள் வெளியேறா விட்டால் சட்ட ரீதியாக அவர்களை வெளியேற்ற ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? மாடிக்கட்டடங்களை அமைக்கவும், அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்கவும் குறித்த பகுதிகளில் உள்ள மக்களை இரும்புக்கரம் கொண்டு பலவந்தமாக வெளியேற்றும் அரசால், ஆபத்தான பகுதிக்குள் வாழ்ந்த மக்களை ஏன் அதே பலவந்தத்தின் மூலம் வெளியேற்ற முடியவில்லை? இப்படி இன்னும் நிறையக் கேள்விகள் மனதைக் குடையவே செய்கின்றன.

**குறித்த பகுதி மண்சரிவு அனர்த்தப் பகுதியென ஏற்கனவே இனம்காணப்பட்டிருந்தது. அது தொடர்பில் கட்டட ஆய்வு நிலையம் ஏற்கனவே தோட்ட நிர்வாகத் தினருக்கு அறிவித்திருந்தது. ஆனாலும் நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை எனத் தெரியவில்லை. எனவே அது தொடர்பில் விசாரணை நடாத்தப்படும்என மஹிந்த சமரசிங்க தன்னையுமறியாமல் உண்மையை உளறிக் கொட்டியிருந்தார்.**

மண் சரிவு ஏற்பட்டவுடன் விழுந்தடித்து பணியில் இறங்கினோம் என கூறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொறுப்பாக செயற்பட்டு அந்த மக்களைப் பாதுகாப்பான பகுதிக்கு நகர்த்தியிருந்தால் இந்தப் பெரும் அனர்த்தத்தை தவிர்த்திருக்கலாம் அல்லவா. தமிழ் சினிமாப் படங்கங்களில் வரும் பொலிஸ் போல, எல்லாம் முடிந்த பின் நடவடிக்கை எடுப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அறிக்கைகள் மூலம் தாம் விட்ட பிழைகள் எல்லாவற்றையும் மண்போட்டு மூட அதிகாரம் இறங்கியிருக்கிறது.

இது ஆபத்தான் இடம். இங்கு வசிக்க வேண்டாம் என்று நாங்கள் இந்த மக்கள்ளுக்கு அறிவுறுத்தினோம் எனக் கூறும் அதிகாரிகள் அந்த மக்களை வேறு இடங்களுக்கு நகர்த்துவதற்கான பணியை ஏன் மேற்கொள்ளவில்லை? அதிகாரிகளின் பணி அறிவுறுத்தல் விடுப்பது மாத்திரமா?

மக்களுக்கான அறிவுறுத்தல்களை வழுங்கிய அதிகாரிகளிகள் அந்தப்பகுதியில் வதியும் மக்களை வேறு இடத்துக்கு நகர்த்தி அவர்களுக்கான மாற்றுத் தங்குமிடங்களை வழுங்க ஏற்பாடு செய்திருக்க வேண்டும். முதலேயே நிவாரணாங்களை வழுங்கி அவர்களைப் பாதுகாத்திருக்க வேண்டும். ஆனால் அப்போது அதைச்செய்யாமல், மக்கள் கூண்டோடு கைலாசம் போன் பின்னர்தம்மை நியாயப்படுத்தல் தானா அதிகாரிகளின் மக்கள் பணி என்ற சந்தேகம் தவிர்க்கமுடியாமல் எழுகின்றது

இப்படியான ஒரு தவறை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் முன்னரும் ஒருமுறை விட்டிருந்தது.

கரையோரப் பிரதேசங்களைக் கடும் புயல் தாக்கும் அபாயம் இருக்கின்றது. எனவே மீனவர்களைக் கடலுக்குச் செல்லாமல் தடுத்து நிறுத்துங்கள் என வானிலை அவதான நிலையம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அறிவித்திருந்தது. ஆனாலும் 4 மணிக்கு அலுவலகத்தை பூட்டுவதில் அதிகாரிகள் காட்டிய அக்கறையில் இந்த அறிவித்தலை மறந்தே போனார்கள். அடுத்த நாள் வரை அந்த எச்சரிக்கை மக்களிடம் சென்றடையவில்லை. இதனால் அடுத்த நாள் கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் பலர் காணாமல் போயிருந்தனர். அதிகாரத் தரப்பும் தம்மை நியாயப்படுத்துவதற்காக விசாரணைகள் நடக்கின்றன. பதில் அதிகாரி கடமையில் இருக்காமை சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுகின்றன எனக் கூறி வெறும் அறிக்கையோடு அந்த விடயத்தை தூக்கிக் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டது. எனினும் இந்த அனர்த்தத்தில் சிக்கிய குடும்பங்களுக்கான நீதி இன்று வரை கிடைக்கவில்லை. அதிகாரிகளின் தவறுகளால் தமது குடும்பத்தலைவர்களை இயற்கையிடம் பறி கொடுத்து விட்டு தமது நாளாந்த சீவியத்தை பெரும் போராட்டத்தின் மத்தியில் ஓட்டி வருகின்றனர் பாதிக்கப்பட்ட மக்கள். இது சம்பந்தமான விசாரணை அறிக்கைகளுக்கு என்ன ஆயின என்பது இது வரை யாருக்குமே புரியவில்லை. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி தானே. அதிகாரிகளின் வார்த்தையில் மிகச் சிறிய தவறாக அர்த்தப் படும் இத்தகைய சம்பவங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்காலத்தையே சிதைத்து விட்டதை யார் உணர்வார்கள்? அப்படியொரு தவறு தான் இப்போதும் இடம்பெற்றிருக்கிறது. கடந்த வாரம் அனர்த்தத்தை எதிர்கொண்ட பகுதி அபாயப் பிரதேசமாகச் சில வருடங்களுக்கு முன்னரே அடையாளப்படுத்தப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையால் இன்று 400க்கும் அதிகமானோர் உயிரை இழக்கவேண்டி வந்துவிட்டது.

வெள்ளம் வர முன்னர் அணை கட்ட வேண்டும். எல்லாவற்றையும் வெள்ளம் அடித்துச் சென்ற பின்னர் பிரேத பரிசோதனை செய்வதில் என்ன பயன்? ஆனாலும் தமது பக்கத் தவறுகளை மறைக்க விசாரணை, தண்டனை என்று அரசு காலத்தை இழுத்தடிக்கலாம். ஆனால் காலம் காலமாகத் தமது உறவுகளை இயற்கையிடம் தொலைத்து விட்டு தேடுவது தான் இலங்கை மக்களுக்கு எழுதப்படாத விதி. யாரோடு நோவோம் யார்க்கெடுத்து உரைப்போம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# புதைப்பவர்களுக்கு மீட்கத் தெரியுமா?

எல்லோராலும் கைவிடப்பட்டிருந்த மலையக மக்களை கடைசியாக அவர்கள் நம்பியிருந்த மலைத்தாயும் கழுதறுத்து விட்டாள். சோவென்று மழை பெய்த ஒரு நாளில் கூண்டோடு ஒரு கிராமமே மண்மேடாக மாறிவிட்டது. அனர்த்தம் நிகழ்ந்த பிறகு அது பற்றி ஆயிரம் விமர்சனங்கள் எழுகின்றன. "அரசும், அதிகாரிகளும், தோட்ட நிர்வாகமும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கியிருந்தால் இந்தப் பேரவலம் நிகழ்ந்திருக்காது" என்பன போன்ற கருத்துகளைப் பரவலாகக் கேட்க முடிகின்றது.

சரி நடந்தது நடந்து விட்டது. ஆனால் இந்த அனர்த்தம் நிகழ்ந்த பிறகு மண்ணுக்குள் புதையுண்டவர்களை மீட்கவாவது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்ற கேள்விக்கும் பதில் இல்லையென்று தான் வருகிறது. மண்சரிவு ஏற்பட்ட உடனேயே இராணுவ அணிகள் அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் அவர்களிடம் உரிய திட்டமிடல் இல்லை. மண்மூடிப் போனவர்களை எப்படி வெளியே பாதுகாப்பாக கொண்டு வரலாம் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. எப்படித் தெரியும்? வழக்கமாக மனிதர்களை மண்ணுக்குள் புதைத்துத் தானே அவர்களுக்குப் பழக்கம். எனவே வழக்கம் போல புதைகுழி தோண்டுவதற்கான கனரக வாகனங்களும் அலவாங்குகளும் மண்வெட்டிகளும் மட்டுமே அவர்கள் கைகளில் இருந்தன. ஏனைய நாடுகளில் உள்ளதைப் போன்று மண்ணுக்குள் இருப்பவர்களை மீட்கும் நவீன தொழிநுட்ப சாதனங்கள் எதுவும் இருக்கவில்லை. இதனால் தான் முந்நூறுக்கும் மேற்பட்டோர் மண்சரிவில் காணாமற் போன நிலையில் மீட்புப் பணியின் முதல் மூன்று நாள்களில் எட்டு உடலங்களை மாத்திரமே கண்டெடுக்க முடிந்தது. இதைவிட வேடிக்கை என்னவென்றால் மீட்புப்பணியின் முதல் நாள் நிறைவடைவதற்கு முன்னரே அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் " காணாமற் போனோர் எவரும் உயிரோடு இருக்க வாய்ப்பில்லை" என்று சொன்னது தான். மண்ணுக்குள் மாதக்கணக்கில் புதையுண்டு மீண்ட சம்பவங்கள் பல உண்டு. அவ்வளவு ஏன்? சில மாதங்களுக்கு முன்னர் காணாமற் போன மலேசிய விமானத்தின் பயணிகள் இன்னமும் உயிரோடு இருப்பதாகவே அவர்களின் உறவினர்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையைச் சிதைக்கக் கூடாது என்பதற்காக மலேசிய அரசு இதுவரை குறித்த பயணிகளுக்கான மரணச் சான்றிதழை வழங்கவில்லை. ஆனால் மக்களின் மனங்களைப் பற்றி எந்தவித அடிப்படைப் புரிதலும் அற்ற இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் "காணாமற் போனோர் எல்லோரும் இறந்திருப்பார்கள்" என்று கூறியமை பாதிக்கப்பட்ட மக்களை இன்னமும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

உலங்கு வானூர்திகள் அனர்த்தம் நிகழ்ந்த இடத்துக்கும் மேலாக பறந்த போதும் அவை மக்களை மீட்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கவில்லை. மாறாக வானத்தில் இருந்த படியே அனர்த்தம் நிகழ்ந்த இடத்தை ஜனாதிபதியும், அமைச்சர்களும் பார்வையிடவே அந்த உலங்கு வானூர்திகள் பறந்து திரிந்தன. உண்மையில் அரசு அனர்த்தம் நடந்த உடனேயே சர்வதேச நாடுகளிடம் உதவியைப் பெற்று மீட்புப்பணியை துரிதமாக்கியிருந்தால் ஒரு சிலரின் உயிர்களையேனும் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால் அப்படி உயிர் காக்கும் பணியில் அரச மீட்பாளர்கள் இறங்கியிருக்கவில்லை. அவர்கள் ஏதோ தமது தாக்குதலில் சிதைந்து போன எதிரியின் முகாம் ஒன்றை ஆற அமர ஆராய்வது போலவே மிகவும் மந்த கதியில் மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்தார்கள். உண்மையாகவே மக்களை காக்க வேண்டும் என அரசு நினைத்திருந்தால் அதிகளவான படைகளை சம்பவ இடத்துக்கு அனுப்பியிருக்க வேண்டும். வெறும் ஆயிரத்து ஐநூறு படையினரை மாத்திரம் மண் சரிவு நடந்த இடத்துக்கு அனுப்பி விட்டு, அதைவிட அதிக எண்ணிக்கையான துருப்புகளை யாழ். பல்கலைக்கழக சூழலில் களமிறக்கியுள்ளது அரசு. ஏனெனில் கார்த்திகை மாதம் என்பதால் பல்கலை மாணவர்களின் மாவீரர் நாள் அனுஷ்டிப்பை முளையிலேயே கிள்ளியெறியத்தான் இந்தப் படைக்குவிப்பாம். அங்கே பதுளையில் தம்மை மீட்குமாறு மண்ணுக்குள் புதையுண்டவர்கள் தவிக்கையில் இங்கே தன்னுடைய அடுத்த கட்ட அராஜகத்துக்கான படைக்குவிப்பில் இறங்கியுள்ளது அரசு. இப்படிப்பட்ட அரசு இருக்கையில் முழுஇலங்கைத் தீவையும் மண்மூடிப் போனால் கூட ஆச்சரியமில்லை.

**"கார்த்திகை மாதத்தில் தான் புலிகள் மாவீரர் வாரத்தை அனுஷ்டிப்பதால், அந்த மாதத்தில் மிகப்பெரிய தாக்குதல்களை நடத்தி அந்த வெற்றியை மாவீரர்களுக்கு காணிக்கையாக்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அப்படி இலங்கைப் படைகளின் நெற்றிப் பொட்டில் அறைந்தது போன்று அதிர்வை உண்டுபண்ணிய தாக்குதல்களில் ஒப்பிரேசன் தவளை முக்கியமானது."**

# தவளைப் பாய்ச்சல்:



பொதுவாகவே கார்த்திகை மாதம் என்றாலே 2009க்கு முற்பட்ட காலத்தில் இலங்கைப் படையினருக்கு குலைப்பன் காய்ச்சல் அடிக்கத் தொடங்கிவிடும். ஏனெனில் கார்த்திகை மாதத்தில் தான் புலிகள் மாவீரர் வாரத்தை அனுஷ்டிப்பதால், அந்த மாதத்தில் மிகப்பெரிய தாக்குதல்களை நடத்தி அந்த வெற்றியை மாவீரர்களுக்கு காணிக்கையாக்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அப்படி இலங்கைப் படைகளின் நெற்றிப் பொட்டில் அறைந்தது போன்று அதிர்வை உண்டுபண்ணிய தாக்குதல்களில் ஒப்பிரேசன் தவளை முக்கியமானது.

பூநகரி - நாகதேவன் துறைப் பகுதியில் இலங்கை இராணுவத்தின் கூட்டுப்படைத் தளத்தின் மீது நவம்பர் 10, 1993 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைதான் தவளைப் பாய்ச்சல்.

பூநகரியில் சிங்களப்படைகளிருந்த போது அந்தப்படைமுகாம் தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம் மிகப்பெரியது. தொண்ணூறுகளின் தொடக்கத்தில் யாழ்ப்பாணம் முற்றுகைக்குள்ளாகியிருந்த காலத்தில் குடாநாட்டை இறுக்கியிருந்த படைத்தளங்கள் இரண்டு. ஆனையிறவு ஒரே தரைவழிப்பாதையை இறுக்கியிருந்தது. கடல்வழியான மாற்றுப்பாதையும் இறுக்கி யாழ்.குடா மக்களை இக்கட்டிலாழ்த்தியது பூநகரிப்படைத்தளம்.

அப்போது யாழ்.குடாநாட்டு மக்களுக்கான ஒரேயொரு போக்குவரத்துப் பாதையாக கிளாலி நல்லூர் பாதையே இருந்தது. யாழ்ப்பாணத்தின் கிளாலிக் கடற்கரையிலிருந்து மன்னார் மாவட்டத்தின் நல்லூர் அல்லது ஆலங்கேணிக் கடற்கரைக்கு இரவில் படகில் பயணம் செய்ய வேண்டும். அந்தப்பாதை இரு பெரும் இராணுவ முகாம்களுக்கு நடுவால் வருகிறது. ஒருபுறம் ஆனையிறவு, மறுபுறம் பூநகரி.

இரவில் பல படகுகள் பயணிக்கும். தொடக்கத்தில் வஞ்சகமில்லாமல் நிறையப்பேர் அந்தக்கடலில் கொன்றுகுவிக்கப்பட்டனர். வெட்டுக்காயங்களோடுகூட தமிழரின் சடலங்கள் கரையொதுங்கின. ஆயினும் பயணம் தொடர்ந்தது. கடலில் இறங்கிவிட்டால் அக்கரை போய்ச்சேர்வோம் என்ற நம்பிக்கை யாருக்கும் இருப்பதில்லை. ஆனாலும் யாழ். குடாநாட்டுக்கான ஒரேயொரு பாதை அதுதான்.

பூநகரியில் சிங்களப்படையின் மிகப்பெரிய கூட்டுப்படைத்தளம் இருந்தது. நாகதேவன்துறையை மையகமாகவைத்து ஒரு கடற்படைத்தளமும் மிகப்பெரிய இராணுவ முகாமும் இருந்தன. கிளாலிக் கடனீரேரியில் நடந்த அத்தனை படுகொலைகளுக்கும் நாகதேவன்துறைக் கடற்படைத்தளமே காரணம்.

இந்தப்பெரிய கூட்டுப்படைத்தளம் மீது புலிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டனர். அதற்கான வேவு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

(உறங்காத கண்மணிகள் என்ற முழுநீளத் திரைப்படம், பூநகரிப் படைத்தளத்துக்குள் வேவு பார்த்த வீரர்களையும், அங்கு நடந்த உண்மைச் சம்பவங்களையும் தழுவியே எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.)

யாழ். தென்மராட்சியில் பூநகரிப் படைத் தளம் மீதான தாக்குதலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கிருந்த பத்துப் பொதுமக்களும் உயிரிழந்திருந்தனர்.

அதன்பின்னும் பூநரிப்படைத்தளம் சிங்களப்படையினரிடமே இருந்தது. ஆனால் கிளாலிக் கடலில் கடற்படையினரின் தாக்குதல் அச்சம் இல்லாமல் போனது. இதனால் இடையூறின்றிப் பொதுமக்களின் பயணம் தொடர்ந்தது. கடற்புலிகளின் பாதுகாப்போடு பகலில்கூட பயணங்கள் நடந்தன.

யாழ். குடாநாட்டை படையினர் முழுதாகக் கைப்பற்றியபோது ஆயிரக்கணக்கான மக்கள் கிளாலிப்பாதையூடாகவே வன்னிக்குச் சென்றார்கள். அதன்பின்னும் பூநகரி படையினரிடம்தான் இருந்தது.

# பேரினப்படைகளுக்கு நெருப்படி

புலியணிகள் பயிற்சியிலீடுபட்டுக் கொண்டிருந்தன. அந்தநேரம்தான் யாழ்ப்பாணம் நோக்கி ஆனையிறவுப் படைத்தளத் திலிருந்து யாழ்தேவி என்ற படை நடவடிக்கை சிங்கள அரசால் தொடங்கப்பட்டது. பூநகரிப் படைத்தளம் மீதான தாக்குதலுக் குத் தயாராகிக்கொண்டிருந்த புலியணிகளைக் கொண்டு அவசரஅவசரமாக யாழ்தேவி நடவடிக்கையை முறியடித்தனர் புலிகள்.

நீண்ட தயார்ப்படுத்தலின்பின் அந்த நாளும் வந்தது. நவம்பர் மாதம் பத்தாம் நாள் இரவு . புலியணிகள் பூநகரித்தளம் மீது தாக்குதல் தொடுத்தன. கடல்வழியாலும் தரைவழியாலும் கூட்டுப்படைத்தளம் மீது அகோரத் தாக்குதல் நடத்தப் பட்டது. விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் வளர்ச்சியில் முக்கியமான சமர் அது. பெரும் சமரொன்றுக்கான விநியோகம், பாதுகாப்பு என்பவற்றை முதன்முதல் கடற்புலிகள் வழங்கினர்.

நீர் வழியாலும் நில வழியாலும் தொடுக்கப்பட்ட சமர் என்பதாலேயே இந்தநடவடிக்கைக்கு தவளைப் பாய்ச்சல்என்று பெயர் சூட்டப்பட்டது.

மூன்றுநாள் சமரின் பின் படைத்தளத்தை முற்றாகக் கைப்பற்றி, வழித்து துடைத்த பின்னர் புலியணிகள் பின்வாங்கின. ஏனெனின் அந்தப்பகுதியைத் தொடர்ச்சியாகப் புலிகள் தம்வசம் வைத்திருப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருந்தன. அங்கேயே தொடர்ந்தும் நிலைகொண்டால் படையினரின் எறிகணை வீச்சு, விமானக் குண்டுத்தாக்குதல் காரணமாக இன்னும் பல போராளிகளை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். எனவேதான் தமது இழப்பைக் குறைக்க புலிகள் 3 நாள்களின் பின்னர் பூநகரியைக் கைவிட்டு தமது தளம் திரும்ப வேண்டியிருந்தது. இந்தச் சமரின்போது ஏராளமான ஆயுதத் தளபாடங்களைக் கைப்பற்றியிருந்தனர். குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய சம்பவம், முதல் முதலாக டாங்கியொன்றை (Tank) அரசபடையினரிடமிருந்து புலிகள் இதன்போது கைப்பற்றினர். இன்னொன்றை அழித்தனர்.

அன்று கைப்பற்றப்பட்ட அந்த டாங்கி தன் சக்திக்கு மீறி உழைத்து புலிகளின் பின்னைய காலத்தாக்குதல்க்ளில் பல முக்கிய வெற்றிகளை ஈட்டிக் கொடுத்தது.

நாகதேவன் துறையிலிருந்து ஐந்து நீருந்து விசைப்படகுகளையும் கைப்பற்றினர் கடற்புலிகள். அவையும் போராட்டத்தில் மிகப்பெரிய பங்கை ஆற்றியிருந்தன.

தவளைப் பாய்ச்சல் தாக்குதலில்.

கடற்கரும் புலிகள் மேஜர் கோபி(குமணன்)

கடற் கரும்புலிகள் மேஜர் கணேஸ் (குயிலன்)

லெப். கேணல் பாமா

லெப். கேணல் அருணன்(சூட்)

லெப். கேணல் நவநீதன்

லெப். கேணல் குணா

போன்ற முக்கிய தளபதிகள் உட்பட 469 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

பூநகரி கூட்டுப்படைத்தளத்தின் மீதான தாக்குதலுக்கு வலுச்சேர்க்கும் வகையில் சமநேரத்தில் பலாலி விமானப்படைத்தளம் மீதும் கரும்புலித்தாக்குல் ஒன்று நடத்தப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தபடி வெற்றியாக அந்தத்தாக்குதல் அமையவில்லை. இந்தத்தாக்குதலில் 13 கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர். பலாலி விமானப்படைத்தளத் தாக்குதலில் 13 கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்

பூநகரியில் ஏற்பட்ட இழப்பால் ஏற்பட்ட ஆத்திரத்தில் யாழ்ப்பாணம் யாகப்பர் தேவாலயத்தின் மீது சிங்கள வான்படை குண்டுகளை வீசி அந்தத்தேவாலயத்தைத் தரைமட்டமாக்கியது. ஆலயம் முற்றாக நாசமானதோடு

முல்லைத்தீவு முகாம் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட பின்னர் கிளிநொச்சி நகரை ஆக்கிரமித்துக்கொண்டது அரசபடை. அந்தநேரத்தில் சத்தம்போடாமல் இராணுவம் ஒரு காரியத்தைச் செய்தது.

1996 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பூநகரிப் படைத்தளத்தில் இருந்து முற்றுமுழுதாகப் பின்வாங்கி யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவிட்டது இராணுவம். சிறுசண்டைகூட இல்லாமல் பூநரிப்படைத்தளம் புலிகள் வசமானது.

தவளைப்பாய்ச்சல் தாக்குதல் மூலம் ஒரு செய்தியை புலிகள் அரசுக்கு உணர்த்தினர். அதாவது தமக்குச் சாதகமற்ற களமுனையில்கூட இராணுவத்தைச் சின்னாபின்னமாக்கும் ஆற்றல் புலிகளுக்கு உண்டு என்பதே அந்தச் செய்தி. அதன்பின்னரும் பல தாக்குதல்களில் புலிகளின் வீரவரலாறு இந்தச் செய்தியை மீண்டும் மீண்டும் உணர்த்திச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் அரசியல் கைதிகள் கோருவெதல்லாம் நிபந்தனையற்ற விடுதலையை அல்ல. "குற்றச் சாட்டுக்களை தாக்கல் செய்து விசாரணையை நடத்துங்கள் அல்லது குற்றம் சாட்ட முடியவில்லை என்றால் விடுதலை செய்யுங்கள்" என்பது தான் அவர்களின் கோரிக்கை.**

# பேசுவோம் பேரத்தை

**- அக்கினிக்குமரன்**



அண்மையில் வரவு - செலவு திட்டத்தின் மீதான உரையை நிகழ்த்திய ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் "அரசியல் கைதிகளை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலியுறுத்தியிருந்தார். இதே போன்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் தீபாவளியை முன்னிட்டு மகசின் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து அவர்களுக்கு பொருள்களை வழங்கியதுடன் அவர்களின் விடுதலைக்கு முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார்.

இவை அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள்.

ஆனால் நீண்ட காலமாகவே அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல வித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பாக எத்தனையோ போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. ஏராளமான பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்றன.

ஆனால் எந்தவிதப் பயனும் கிட்டவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சராகப் பதவியேற்ற போது தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை குறித்த கைதிகளிடம் மட்டுமன்றி, தமிழ் மக்களிடமும் பிறந்தது.

தமிழ் அரசியல் கைதிகள் கோருவெதல்லாம் நிபந்தனையற்ற விடுதலையை அல்ல. "குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்து விசாரணையை நடத்துங்கள் அல்லது குற்றம் சாட்ட முடியவில்லை என்றால் விடுதலை செய்யுங்கள்" என்பது தான் அவர்களின் கோரிக்கை. அந்தக் கோரிக்கையில் நியாயமில்லை என எவரும் கூறி விட முடியாது. ரவூப் ஹக்கீம் ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையிலாவது இந்தக் கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பார் எதிர்பார்க்கப்பட்டது.

அவரும் பதவியேற்ற புதிதில் சிறப்பு நீதிமன்றங்களை அமைத்து தமிழ் அரசியல் கைதிகள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தப்போவதாக வாக்களித்தார். ஆனால் இன்று வரை எதுவுமே நடைபெறவில்லை. குற்றப் பத்திரங்களைத் தாக்கல் செய்ய வேண்டிய சட்டமா அதிபர் திணைக்களம் இந்த அரசியல் கைதிகளைப் பொறுத்த வரையில் பெரும் துயிலில் ஆழ்ந்து விட்டது.

இந்த நிலையில் 15 வருடங்கள், 10 வருடங்கள் என பல கைதிகள் நீண்ட கால சிறைத்தண்டயை எந்தெவாரு நீதிமன்றத்தின் உத்தரவின்றி அனுபவித்து வருகிறார்கள். எதிர்காலம் என்னவென அறியாத நிலையில் அவர்கள் உண்வுத்தவிர்ப்பு போராட்டம் முதல் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். அவற்றுக்கு வழங்கப்பட்ட பதில் கொடூரமான தாக்குதல்களே. இப்படியான தாக்குதல்களில் சில கைதிகள் உயிரிழக்கும் நிலையும் ஏற்பட்டது.

ஒரு நீதிபதியின் தீர்ப்பின்றி சிறைச்சாலைக்குள் மரண தண்டனை வழங்கும் ஒரு பாரம்பரியம் இலங்கையில் ஜனநாயகத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்ற ஒரு கேள்வியும் எழுகிறது.

மனித வாழ்வில் 15அல்லது 20 வருடங்கள் என்பது சிறிய காலப்பகுதியல்ல. அதிலும் இளமையில் அந்த வருடங்கள் மிக முக்கியமானவை. அப்படியிருந்தும் குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாமல் இப்படி நீண்டகால தண்டனைக்கு உட்படுத்தப்படும் அராஜகத்தை இலங்கையின் ஆட்சியாளர்களால் மட்டுமே நிறைவேற்ற முடிகிறது.

அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோரி கைதிகளும், பல்வேறு தரப்பினரும் போராட்டங்களை நடத்திவரும் போதும், கோரிக்கைகளை முன்வைக்கும் போதும், அரசாங்கம் அதற்கு நேர்மாறாகவே செயற்படுகின்றது. அதாவது விசாரணையின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கும் கைதிகளின் தொகையை மேலும் மேலும் அரசு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

பயங்கவாதக் குற்றத் தடுப்பு பிரிவினர் விடுதலைப் புலிகளின் மீளெழுச்சியை தடுப்பது என்ற போர்வையில் தொடர்ச்சியாகப் பலரைக் கைது செய்து தடுத்து வைத்திருக்கின்றனர். தொடர்ந்தும் அந்த வகையான செயற்பாடுகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவிடம் சாட்சியமளிப்பதில் அக்கறை காட்டுபவர்கள் அடுத்தடுத்து வெவ்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நேரடியாகச் சொல்வதானால் அவர்கள் சாட்சியமளிக்காதபடி பூசா முகாமில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

காணாமல் போன ஒரு இளைஞனின் தாயாரான தர்மபுரத்தைச் சேர்ந்த ஜெயக்குமாரி என்பவர் காணாமற் போனோர் தொடர்பான போராட்டங்களில் தீவிரமாகப் பங்கு கொண்டவர். இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக வெளிநாட்டு ஊடகங்களுக்கு பேட்டியும் வழங்குபவர். அவர் விடுதலைப்புலிச்சந்தேகநபர் ஒருவரை வீட்டில் மறைத்து வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். ஒரு வருடம் கடந்து விட்ட நிலையிலும் அவர் இன்னமும் விடுதலை செய்யப்படவுமில்லை; குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படவுமில்லை.

அவர் கைது செய்யப்பட்ட அதே காலப்பகுதியில் பல இளைஞர்கள் , பெண்கள் , முதியவர்கள் கூடக் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் முழங்காவில் இரணைமாதா நகர்ப்பகுதியில் வைத்துக் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை வைத்திருந்தார் என முதலில் கூறப்பட்டது. பின்பு அவர் முன்னாள் புலி உறுப்பினர் எனவும், ஆயுதப் பயிற்சி பெற்றவர் எனவும் புனர் வாழ்வு பெற்றவர் எனவும் கூறப்பட்டது. ஆனால் அவர் புனர்வாழ்வு பெறாமையாலே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் தரப்பினரால் இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் கைதானவரின் குடும்பத்தவரோ "அவருக்கு விடுதலைப்புலிகள் அமைப்புடன் எந்தவித தொடர்பும் இல்லை . அவர் போரின் போது படையினரின் தாக்குதலில் ஒரு மகனைப் பறி கொடுத்தவர்" எனவும் கூறுகின்றனர்.

தனது மகனை இழந்த ஒருவர் அது தொடர்பாக முறைப்பாடு செய்வதைக் கூட இலங்கை அரசு குற்றமாகக் கருதுகின்றது.

அரசியல் கைதிகள் விசாரணையின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுவதற்கும் , தொடர்ந்தும் அந்தத் தொகையை அதிகரிப்பதற்கும் அடிப்படையாக விளங்குவது பயங்கரவாதத் தடுப்புச் சட்டமே.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் தான் இலங்கையில் பொலிஸார், படையினர், புலனாய்வுப் பிரிவினர் ஆகியோர் மேற்கொள்ளும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் சட்ட பூர்வமாக்கப்பட்டன.

எனவே அரசியல் கைதிகளின் விடுதலையும், தொடர்ச்சியாக நடைபெறும் கைதுகளைத் தடுத்தலும் பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறையில் உள்ள வரை சாத்தியமாகப் போவதில்லை.

**மனித வாழ்வில் 15அல்லது 20 வருடங்கள் என்பது சிறிய காலப்பகுதியல்ல. அதிலும் இளமையில் அந்த வருடங்கள் மிக முக்கியமானவை. அப்படியிருந்தும் குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாமல் இப்படி நீண்டகால தண்டனைக்கு உட்படுத்தப்படும் அராஜகத்தை இலங்கையின் ஆட்சியாளர்களால் மட்டுமே நிறைவேற்ற முடிகிறது.**

எனவே எதிர்காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான போராட்டங்களை நடத்துவது முக்கியமானதாகும் . எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த ஒரு தரப்பினருடனும் தமிழ்க் கட்சிகள் பேரம் பேசும் போது இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பது அவசியம். தேர்தல் வெற்றிக்காகவாவது தமிழ் அரசியல் கைதிகளை சில வேளைகளில் கூண்டை விட்டு திறந்து வெளியில் செல்ல அனுமதிக்கக் கூடும் அல்லவா? தமிழ் அரசியல் கட்சிகள் இத்தகைய் பேரத்தில் இறங்குவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-புருஜோத்தமன்

> **அபாய அறிவிப்புக்கள் விடுக்கப்படுவதால் மாத்திரம் உயிரிழப்புக்களைத் தவிர்த்துவிட முடியும் என்றால், இந்த உலகம் இலட்சக்கணக்கான உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்கும். யுத்த சூனிய வலயம் என்று அறிவித்து விட்டு அதற்குள்ளேயே குண்டு மழை பொழிவதுதான் நவீன உலகின் போர் தர்மம். எப்போதுமே, அபாய அறிவிப்புக்கள் மாத்திரம் பதியப்படும்.**



# விழித்தெழ வேண்டிய காலம்

அபாய அறிவிப்புக்கள் விடுக்கப்படுவதால் மாத்திரம் உயிரிழப்புக்களைத் தவிர்த்துவிட முடியும் என்றால், இந்த உலகம் இலட்சக்கணக்கான உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்கும். யுத்த சூனிய வலயம் என்று அறிவித்துவிட்டு அதற்குள்ளேயே குண்டு மழை பொழிவதுதான் நவீன உலகின் போர் தர்மம். எப்போதுமே, அபாய அறிவிப்புக்கள் மாத்திரம் பதியப்படும். அதற்கான அடிப்படைகளைப் பேணுவது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் என்றைக்கும் பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை.

அதுதான், பதுளை மீரியபெத்த பகுதியில் ஒக்டோபர் 29 காலை இயற்கையின் பெயரினால் மண்சரிவு வடிவில் பிரதிபலித்திருக்கிறது. இந்தப் பத்தி எழுதப்படும் வரை 8 சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. 300க்கும் அதிக மானவர்களைக் காணவில்லை. மழை உள்ளிட்ட சீரற்ற காலநிலையி னால் முன்னெடுக்கப்பட்டிருந்த மீட்புப் பணி களும் அடிக்கடி நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில், 30 அடி ஆழத்தில் புதையுண்டிருக்கும் 300க்கும் அதிகமானவர்களின் நிலை என்ன? எண்ணிக்கைகள் வேண்டுமானால் ஊடகப் பரபரப்புக்கு தீனி போடலாம். ஆனால், உயிர் வலிகளும், அவை சுமந்து நின்ற பேரவலத்தின் அடையாள வாழ்க்கையையும் யாரும் பெரிதாகக் கண்டு கொள்வதற்கான வாய்ப்புக்கள் இங்கு இல்லை.

அப்படியான அக்கறை இருந்திருந் தால், ஏற்கனவே (2011ஆம் ஆண்டு) அபாயப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதியிலிருந்து அந்த மக்களை ஒட்டு மொத்தமாக வெளியேற்றியிருப்பார்கள். மாற்றுக் காணிகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும். அபாயப் பகுதி என்று அறிவித்துவிட்டு அங்குள்ள 40 குடும்பங்களுக்கு மாத்திரம் மாற்றுக் காணிகளை வழங்கிவிடுவதால், அபாய அறிவிப்பு நீங்கிவிடுமா என்ன?

அரசாங்கம் தோட்ட முகாமைத்துவத் தைக் குறை சொல்கின்றது. தோட்ட முகாமைத்துவம் தனக்கான காரணங் களைத் தேடிக் கொண்டிருக்கும். இழப்புக் களுக்கான காரணங்கள் ஏற்கனவே தெரிவித்துவிட்ட நிலையில், அவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளை சம்பந்தப் பட்டவர்கள் பெரிதாக எடுக்கவில்லை. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பெயரள வில் மட்டுமே இடம்பெற்றிருக்கின்றன.

தோட்ட முகாமைத்துவம் மக்களுக்கான மாற்றுக் காணிகளை வழங்கவில்லை என்று அரசாங்கம் குற்றஞ்சாட்டுகின்றது. ஆனால், தோட்டங்களின் முகாமைத்துவ அலகு மாத்திரமே தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. காணிகள் இன்னமும் மத்திய அரசாங்கத்தின் சட்ட ஆளுகைகளுக்குள்ளேயே இருப்பதாக சட்டத்தரணிகள் கூறுகின்றனர். அப்படி யான நிலையில், தேவையான காணி களைப் பெற்று அல்லது தேர்வு செய்து அபாயமுள்ள பகுதிகளில் குடியிருக்கும் மக்களைப்பாதுகாப்பான இடங்களில் குடியேற்றுவது யாரின் கடமை? சாட்டுப் போக்குகள் என்றைக்கும் போன உயிர்களையும், வாழ்க்கையையும் மீண்டும் தந்துவிடப் போவதில்லை.

பிரித்தானியர்கள் காலத்து லயன்களிலேயே இன்னமும் அதிகளவான மலையக மக்கள் குடியிருக்கிறார்கள். அவர்களின் அடிப்படை வாழ்க்கை என்பது சர்வதேச வாழ்க்கைத் தர நியமனங்களுக்கு மிகவும் கீழானது. இலங்கை அரசாங்கங்களைத் தீர்மானிக்கும் அளவுக்கு வாக்குப் பலத்தைக் கொண்டிருக்கின்ற சமூகம் இன்னமும் அடிமட்டத்தில் உழன்று கொண்டிருக்கிற நிலைமைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

பெரும்பான்மை மனநிலை அரசாங் கங்களும், ஆட்சியாளர்களும், அவர் களின் சார்பாளர்களும், தோட்ட முகா மைத்துவமும், தோட்டத் தொழிலாளர் சங்கங்களும், அரசியல் கட்சிகளும், தலைவர்களும் [illegible] யும் மலையக மக்கள் 200 ஆண்டு களைக் கடந்தும் அலைக்கழிப்பான வாழ்க்கை வாழ்வதற்கு காரணமாகச் சொல்லிக் கொள்ள முடியும்.

ஆனால், இன்னொரு பெரும் காரணம் பற்றியும் நாம் பேச வேண்டியி ருக்கிறது. இல்லாது போனால் இன்னும் இன்னும் எமது உறவுகளின் இழப்புக்களை நாம் இயற்கையின் பெயரினால் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

அடுத்த சந்ததியின் பாதுகாப்பான வாழ்க்கை, அடிப்படையான கல்வி, தொழிற்பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் மலையக இளைஞர்களிடம் ஏற்பட்டிருக்கின்ற விழிப்புணர்வு பேரெழுச்சி பெற வேண்டிய காலம் இது.

வடக்கு- கிழக்கிலுள்ள தமிழ் மக் களும், மலையக வாழ் தமிழ் மக்களும் எதிர்கொள்ளும் அரசியல் பிரச்சினை களுக்கு அப்பால், அடிப்படையான வாழ்க்கைப் பிரச்சினைகள் அதிக தருணங்களில் வேறு வேறானவை.

நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதா ரத்தையும் பெரும் காலம் வரையில் தமது தோள்களில் சுமந்த ஒரு சமூகம் இன்றைக்கும் பெரும் மாற்றங்களின்றி முடங்கிப் போயிருக்கின்றது. அவற்றைத் தமது அரசியல் இலாபங்களுக்காக மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருக்கும் கட்சிகள், தொழிற் சங்கங்களை சரியாகக் கையாள வேண்டிய தேவை பற்றிய விழிப்புணர்வு என்பது பெருமளவில் ஏற்பட வேண்டும். அதுவும், மலைய இளைஞர்களிடத்தில் ஏற்படும் விழிப்புணர்வைக் காட்டிலும் மலையகப் பெண்களிடம் ஏற்படும் விழிப்புணர்வே சமூக முன்னேற்றத்தின் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்த முடியும்.

மறைந்த (முன்னாள் அமைச்சர்) சந்திரசேகரன் மலையக இளைஞர்களின் விழிப்புணர்வு கொண்ட எழுச்சியின் குறியீடாக ஒரு காலம் வரையில் கொள்ளப்படக் கூடியவராகவே இருந்தார். ஆனால், அவர் தேர்தல்- வாக்கு அரசியலுக்குள் வந்த பின் ஒட்டுமொத்தமாக சீர்குலைந்து போனார். அவரின் இறுதிக் காலம் என்பது அவரைச் சார்ந்திருந்த கட்சி, தொழிற்சங்கங்களின் படுதோல்வியின காலமாகவே கொள்ளக் கூடியது.

மலையகத்தில் ஏற்படும் எழுச்சி என்பது சந்திரசேகரன் உள்ளிட்டவர்கள் ஏற்படுத்தியதைத் தாண்டியதாக இருக்க வேண்டும். அது, தேர்தல்- வாக்கு அரசியலையும் இலகுவாகக் கையாண்டு அடுத்த தலைமுறை தொடர்பிலான அக்கறையைப் பெருமளவில் வெளிப் படுத்துமளவுக்கு இருக்க வேண்டும்.

இல்லையென்றால், தோட்டங்களில் வேலை செய்வதிலிருந்து விடுபடுதலின் அடுத்த இலக்கு என்பது கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் கடைகளி லும், வீடுகளிலும் வேலை செய்வதா கவே அமையும் சூழலே நீண்டு செல் லும். அவற்றை மாற்றுவதற்கான அடிப் படைகள் தொடர்பில் போியக்கமாக மலையக இளைஞர்களும், பெண்களும் தம்மை முன்னிறுத்திக் கொள்ள வேண்டும்.


சாராயப் போத்தல்கள் வாக்குகளைப் பெற்றுத் தந்துவிடும் என்ற சூழ் நிலையை உருவாக்கி வைத்திருக்கும் மலைய அரசியல் கட்சிகளின் எண்ணங்களில் தீயிட்டு, பெரும் இலக்குகள் நோக்கி ஓட வேண்டியதே மலையக மக்களின் இன்றைய அவசியம். அதுவே, 200 ஆண்டுகால அடிமை வாழ்க்கையை மாற்றி சுதந்திர வாழ்க்கையைக் கொடுக்கும். அதுதான், அவசியமானது. அப்போது, இயற்கை அனர்த்தங்களையும் வென்று விடலாம். போலிக் காரணங்களைத் தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை!

> **சாராயப் போத்தல்கள் வாக்குகளைப் பெற்றுத் தந்துவிடும் என்ற சூழ்நிலையை உருவாக்கி வைத் திருக்கும் மலைய அரசியல் கட்சிகளின் எண்ணங்களில் தீயிட்டு, பெரும் இலக்குகள் நோக்கி ஓட வேண்டியதே மலையக மக்களின் இன்றைய அவசியம். அதுவே, 200 ஆண்டுகால அடிமை வாழ்க்கையை மாற்றி சுதந்திர வாழ்க்கையைக் கொடுக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## ஆன்மீகத் தொடர் - 37



சீர்டி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீர்டி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றை யெல்லாம் தொகுத்து எழுதிய தொடர்

இப்போது ஸாயிபாபாவிடம் வந்து தனக்கு பிரம்மஞானம் அளிக்க வேண்டுமென்று மன்றாடி வேண்டிக் கொண்ட ஒரு பணக் காரரைச் சமாளித்து எப்படி அனுப்பி வைத்தார் என்னும் கதையைக் கேட்போம். தனது வாழ்க் கையில் மிகவும் சுபீட்சத்துடன் விளங் கிய பணக்காரர் ஒருவர் இருந்தார் (துரதி ஷ்டவசமாக அவர் பெயர் இருப் பிடம் முதலியன குறிக்கப்பட வில்லை) அவர் ஏராளமான செல்வம், வீடுகள், வயல் கள், நிலங்கள் முதலியவற்றைப் பெரும் திரளாகக் குவித்திருந்தார். பல வேலை யாள்களும் சார்ந்து வாழ் வோரும் வாய்க்கப்பட்டவராக் இருந்தார். பாபா வினது புகழ் அவர் தனக்கு எந்த விதமான பொருளும் தேவையிருக்க வில்லையென்றும் எனவே அவர் சீர்டிக்குச் சென்று பாபாவிடம் பிரம்ம ஞானத்தை அருளும் படி வேண்டப் போவதாக வும் அங்ஙனம் அதை அவர் பெற்றால் அது தன்னை நிச்சயம் இன்னும் அதிக மகிழ்ச்சியுடைய வராக் கும் என்று கூறினார். அவரது நண்பர் பின்வருமாறு உரைத்து அவர் கருத்தை மாற்ற முயன்றார். பிரம்மத்தை அறிவெதன்பது அவ் வளவு எளிதல்ல. அதிலும் சிறப்பாக மனைவி மக்கள் செல்வம் என்னும் கவனங்களிலேயே முழுவதுமாகக் கவரப்பட்டிருக்கும். பேராசைக் காரருக்கு எளிதே அல்ல. ஒரு பை சாவும் தர்மத்துக்காக ஈயா மிதரா கிய உம்முடைய பிரம்ம ஞான நாட்ட த்தை யாரோ திருப்தி செய்ய இயலும்?

இந்தப்போர்வழி தமது நண்பரின் அறிவுரையைப் பொருட்படுத்தாது போய் வர குதிரை வண்டியைப் பேசியமர்த்தி சீர்டிக்கு வந்தார். மசூதிக்கு சென்று ஸாயி பாபவைப் பார்த்தார். அவர் பாதங்களில் வீழ்ந்து கூறினார். ப்பா இங்கு வருவோர் அனைவருக்கும் எந்தவிதத் தாமத மு மின்றி தாங்கள் பிரமம்தைக் காண் பிக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டு தொலை விலுள்ள எனது இடத்திலி ருந்து இங்கு நான் வந்திருக்கிறேன். எனது பிரயா ணத்தால் மிகவும் களைப் படைந்துள் ளேன். நான் தங்க ளிடமிருந்து மிரம்மத் தைக் காண் பிக்கிறீர்கள் என்று கேள்விப் பட்டு தொலைவிலுள்ள எனது இடத்தி லிருந்து இங்கு நான் வந்திருக்கி றேன். எனது பிரயாணத்தால் மிகவும் களைப் படைந்துள்ளேன். நான் தங்களி டமிருந்து பிரம்மத்தைப் பெறுவா னாகில் எனது கடின முயற்சி கௌல்லாம் நன்றாக ஊதியம் அளிக்கப்பட்டு பரிசு நல்கப் பட்டவை யாகும்.

பாபா அப்போது கூறியதா வது ஓ எனதருமை நண்பனே ஏங்கிக் கவலையுறாதே. நான் உடனே உனக்கு பிரம்மத்தைக் காண்பிக்கிறேன். எது நடைமுறைத் தொடர்புகளைனைத்தும் ரொக்கத் திலேதான். கடனில் அல்ல. எனவே பலர் என்னிடம் வந்து செல்வம், தேகாரோக்கியம் ஆற்றல் புகழ் பதவி வியாதி நிவாரணம் முதலிய இந்த உலகப் பொருள்களையே கேட்கின் றனர். இங்கு என்னிடம் வந்து 'பிரம்ம ஞானத்தைக்' கேட் பவர் அரிது. இந்த உலகப் பொருள் களைக் கேட்பவர் களுக்குப் பஞ்சமே இல்லை. ஆர்த்மாத்த விஷயங்களில் ஆர்வமுடைய மனிதர் களைக் காண்பது மிகவும் அரிதாகை யால் உம்மைப் போன்ற மனிதர்கள் வந்து என்னை பிரம்மஞானாம் தரச் சொல்லி வற்புறுத்தும் போது அந்தத் தருணத்தை யான் அதிர்ஷ்டமும் புனிதமும் வாய்ந்ததாகக் கருதுகி றேன். எனவே உடனே மகிழ்ச் சியுடன் உனக்கு பிரம்மத்தை அதன் அனைத்துச் சுற்றுச் சுழல் களுடனும் பின்னல் சிக்கல் களுடனும் தெரிவித்துக் தெளி விப்பேன்.

இதைப் புகன்ற பின்னர் பாபா அவருக்கு பிரமத்தைப் புலப்படுத்த ஆரம்பித்தார். அவரை அங்கே அமரும் படி செய்து பிறிதோர் உரை யாடலிலோ , விவகாரத்திலோ அவர் ஈடுபடும் படியாகச் செய்தார். இவ்வா றாகத் தற்காலிகமாக அவரைத் தம் வினா வினை மறக்கச் செய்தார். பிறகு ஒரு பையனைக் கூப்பிட்டு அவனை நந்து மார்வாடியிடம் சென்று ஐந்து ரூபாய் கைமாற்று வாங்கி வரும்படிக் கூறினார்.

(ஞானத்தை தேடுவோம்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 645

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | | |
| 19 | | 20 | | ■ | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

**மேலிருந்து கீழ்**

1- தர்க்கம்.
2-அருள் கூர்ந்து அளிப்பது.
3-நறுமணம் பெற பயன்படுத்துவர்.
4-நெஞ்சு.
5-சரியானது.
6-பகுபத உறுப்பில் ஒன்று.
8-இரண்டு.
10-தமிழ் மாதம் ஒன்று.
13-இறத்தல்.
14-ஒருவரைப்பற்றி மற்றொருவரிடம் கோள் சொல்லுதல்.
15-பன்னிரண்டு அங்குலம்.
16- கொலை செய்யாமை.
17-தினசரி மாறுவது.
18-நம்முடைய
20-இது அறுபத்து நான்கு என்பர்.

**இடமிருந்து வலம்**

1-வேளாண்மை செய்பவன்.
4-சிலப்பதிகாரத்தில் கோவலன் காதல் நாயகி.
7-ஏழு நாள்கள் சேர்ந்தது.
8-தென்னோலையைக் கீறிப் பெறுவது.
9-இளைய சகோதரர்மார்.
11-வேகம்.
12-சோதிடத்தில் இவை பன்னிரண்டு.
13-போதை தருவது.
14-குழு.
15-சிங்கம்.
17-வலிமை.
18-சினிமாவிலும்,நாடகத்திலும் பலரும் செய்வது.
19-ஒரு ராசி .
21-சிதம்பரம்.
22-அறியாமை.

அனுப்புபவர் பெயர்:---------------------------------

விலாசம்:---------------------------------------

-----------------------------------------------

கையொப்பம்:-------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 645

■ சொற்சிலம்பம் போட்டி 645ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே நவம்பர் 26ஆம் மற்றும் டிசெம்பர் 03ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 642இல் பரிசு பெற்றோர்

1. ம.வளர்மதி, 3ஆம் வட்டாரம், முள்ளியவளை.
2. ம.விலர்ஜினா, இல:-26/5, ஆசீர்வாதப்பர் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.
3. நிதலன் லக்ஷகி, காளி கோவிலடி, துர்க்காபுரம்,தெல்லிப்பழை.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவல கத்திலும், நெல்லியடி,சாவகச்சேரி,கிளிநொச்சி,கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

- செல்வி தி.ஜயா, நாவற்குழி கிழக்கு, கைதடி.
- திருமதி .சி. புஸ்பராணி, வசந்தபவனம்,மருதடி மேற்கு, சாவகச்சேரி.
- எஸ். கே. குணபாலன், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.
- பொன்.கயிலாயபிள்ளை, இல 77, இரண்டாம் பகுதி, விசுவமடு மேற்கு, விசுவமடு.
- ம.ஆரணி, வைத்தியசாலை வீதி, கட்டைக்காடு,தருமபுரம்.

### சொற்சிலம்பம் போட்டி 643இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.ஏகத்துவம்
2.மாலை
3.புதினம்
4.கவி
5.முடவன்
6.கும்
9.ராம்
10.பாரதிதாசன்
12.வழு
13.அடி
14.புத்திரன்
16.மார்
18.சம்பா
19.அதிதி
20.கட

**இடமிருந்து வலம்**

1.ஏமாப்பு
4.கமுகு
7.கலை
8.திராவிடம்
10.பானம்
11.துவரம்
13.அன்பு
15.வழுதி
16.மாடி
17.தாசர்
19.அதி
20.கசம்
21.முதிர
22.கடன்பாடு
23.தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுக்குள் வாழ்ந்தவன்

சாகசம் - 04

- சமரன்

1981 ஆம் ஆண்டு யாழ் நூலகம் எரிக்கப்பட்ட போது தமிழர் பகுதியெங்கும் பெரும் கலவரத்தை உண்டாக்க பேரினவாதம் திட்டமிட்டிருந்தது. கொழும்பைப் போல இங்கு சிங்கள காடையர்களை இறக்குமதி செய்ய முடியாது என்பதால் வேறு திட்டம் ஒன்று கோரப்பட்டது. இங்கு காடையர்களுக்குப் பதிலாக சிங்களப் பொலிஸாரைக் களமிறக்க அதிகார பீடம் முடிவெடுத்தது.

இந்தத் திட்டத்தின் ஒரு அங்கமாக வடமராட்சியில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்தும் ஒரு குழுவினர் தமிழ் மக்கள் மீது வன்முறையில் இறங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நூலகம் எரிந்து கொண்டிருந்தது. அந்தத் தகவல் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்தவுடன் அதிகாரத்தின் ஏவல் நாய்களாகச் செயற்படும் சிங்களப் பொலிஸார் சிலர் தமிழ் மக்களின் குடியிருப்புகள் மீது பாயத் தயாரானார்கள்.

ஆயுதங்களோடு அவர்கள் புறப்படுகையில் "நில்லுங்கள்" என்று அவர்களை அதட்டி நிறுத்தியது ஒரு குரல். அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் பொலிஸ் பொறுப்பதிகாரியான திருச்சிற்றம்பலம். அரியாலையைச் சேர்ந்தவர். அதிகாரத்தின் ஏவுதலில் பாயச் சென்ற சிங்களப் பொலிஸாரை துணிச்சலோடு தடுத்து நிறுத்தினார் அவர். அன்று அவர் தடுத்திரா விட்டால் வடமராட்சியில் பொலிஸாரின் பேயாட்டத்தில் இரத்த ஆறு ஓடியிருக்கும். அன்று அவர் எடுத்த துணிச்சலான முடிவால் தாங்கள் காப்பாற்றப் பட்டதை அறிந்த வடமராட்சி மக்களிடையே பொலிஸ் பொறுப்பதிகாரி திருச்சிற்றம் பலம் பற்றி நல்ல அபிப்பிராயம் நிலவி வந்தது. அவர் மீது பொதுமக்களுக்கு மாத்திரமல்லாது விடுதலைப் புலிகளுக்கும் அவர் மீது ஒரு அபிமானம் இருக்கவே செய்தது.



**"நில்லுங்கள்" என்று அவர்களை அதட்டி நிறுத்தியது ஒரு குரல். அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் பொலிஸ் பொறுப்பதிகாரியான திருச்சிற்றம்பலம். அரியாலையைச் சேர்ந்தவர். அதிகாரத்தின் ஏவுதலில் பாயச் சென்ற சிங்களப் பொலிஸாரை துணிச்சலோடு தடுத்து நிறுத்தினார் அவர். அன்று அவர் தடுத்திரா விட்டால் வடமராட்சியில் பொலிஸாரின் பேயாட்டத்தில் இரத்த ஆறு ஓடியிருக்கும்.**

இதனால் தான் அவர் தாக்குதல் நடத்த சங்கர் தயங்கினான். ஏனெனில் திருச்சிற்றம்பலம் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டால் அது மக்களிடையே புலிகள் மீதான அதிருப்தியை உண்டு பண்ணிவிடும். எனவே தான் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்த சிங்கள பொலிஸ் பொறுப்பதிகாரி அடுத்த நாள் ரோந்து வரும் போது பார்க்கலாம் என்பது சங்கரின் கணிப்பு.

அடுத்த நாளும் வந்தது. அதற்கிடையில் ஒரு வீட்டில் திடீரென ஏராளமான இளைஞர்கள் தங்கியிருந்ததால் அந்தப் பகுதி மக்களிடையே ஒரு சந்தேகம் தோன்றியது. இதனை சங்கர் தலைமையிலான புலிகளின் அணியும் அறிந்திருந்தது. எனவே எப்படியும் அன்று மாலை தாக்குதலை நடத்தி முடித்து விட்டு தங்களுடைய ரகசியத் தளங்களுக்கு அவர்கள் திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் ஊரவர்களின் சந்தேகம் பொலிஸாருக்கும் தெரிந்து நிலைமை விபரீதமாகக் கூடும்.

"எப்படியும் இண்டைக்கு அடி குடுக்கிறது தான்" என்று முடிவெடுத்த படி முதல் நாளைப் போன்றே அடுத்த நாளும் நிலையெடுத்துக் கொண்டார்கள் புலிகள். மாலைக்கருக்கலில் ஜீப்பின் உறுமல். பதுங்கியிருந்த புலிகள் பாய்வதற்கு தயாரானார்கள். ஆனால் கொஞ்ச நேரத்திலேயே அவர்களின் முகங்கள் வாடிப் போயின. காரணம், அன்றைக்கும் ரோந்து அணியை வழிநடத்தியபடி வந்தவர் திருச்சிற்றம்பலம் தான். நேற்றுப் போலவே இன்றும் தாக்குதலை சங்கர் பிற்போடப்போகிறான் என்றே ஏனைய புலிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால் நடந்ததோ வேறு.

சந்தியில் இருந்து வீடு நோக்கிச் செல்வது போல நடந்து சென்ற சங்கர் பொலிஸ் ஜீப் அருகே சென்றதும் நடையின் வேகத்தைக் குறைத்தான்.

சரேலென இடுப்பிலிருந்த துப்பாக்கியை எடுத்து பொலிஸ் ஜீப் சாரதியை நோக்கி நீட்டினான்.

"டுமீல்"

நெல்லியடிச் சந்தியே அதிர்ந்தது. நின்றவர்கள் எல்லோரும் என்ன நடக்கிறது என்பதை உணர முடியாதவர்களாக தலைதெறிக்க ஓடத் தொடங்கினார்கள்.

நாலா புறத்திலிருந்தும் ஜீப்பை நோக்கி இனம் தெரியாத இளைஞர்கள் நெருங்குவதையும், தன்னுடைய சாரதி நெற்றியில் குருதி வடிய குப்புற கிடப்பதையும் கண்டு திகைத்துப் போனார் திருச்சிற்றம்பலம். அடுத்த நொடியே "சுட்டுத் தள்ளுங்கள்" என்று பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

**சந்தியில் இருந்து வீடு நோக்கிச் செல்வது போல நடந்து சென்ற சங்கர் பொலிஸ் ஜீப் அருகே சென்றதும் நடையின் வேகத்தைக் குறைத்தான். சரேலென இடுப்பிலிருந்த துப்பாக்கியை எடுத்து பொலிஸ் ஜீப் சாரதியை நோக்கி நீட்டினான். "டுமீல்" நெல்லியடிச் சந்தியே அதிர்ந்தது. நின்றவர்கள் எல்லோரும் என்ன நடக்கிறது என்பதை உணர முடியாதவர்களாக தலைதெறிக்க ஓடத் தொடங்கினார்கள்.**

அவ்வளவு தான். வெடித்தது மோதல். புலிகள் ஏற்கனவே நிலையெடுத்து இருந்ததால் எங்கிருந்து வேட்டுகள் வருகின்றன என்பதைப் பொலிஸார் ஊகிக்க முடியவில்லை. அதற்கிடையில் அவர்களின் கதையை புலிகளின் துப்பாக்கிகள் முடித்திருந்தன. ஆனால் பொறுப்பதிகாரி திருச்சிற்றம்பலத்தை மாத்திரம் கொல்லவில்லை. காயத்தோடு அவர் தப்பிச்செல்ல புலிகள் அனுமதித்தனர்.

சற்றுறக்கெல்லாம் கொல்லப்பட்ட பொலிஸாரின் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு எந்த வித இழப்பும் இன்றி தளம் திரும்பினார்கள் புலிகள்.

மிகக் குறைந்த ஆளணியோடு வெற்றிகரமான தாக்குதலை செய்ய முடியும் என்று இதன் மூலம் நிரூபித்தவன் தான் சங்கர்.


வேடிக்கை என்னெவன்றால் இந்தத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் பொறுப்பதிகாரி திருச்சிற்றம்பலத்தை அவர் குணமாகும் வரை வைத்தியசாலையில் வைத்து பராமரித்தவர் வேறு யாருமல்ல, பிற்காலத்தில் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளராக உயர்ந்த பொட்டம்மான் தான்.

(சாகசம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜித்தோடு ஹன்சிகா

'வீரம்' படத்தை இயக்கிய 'சிறுத்தை' சிவா இயக்கத்தில் நடிக்கவுள்ளார் அஜித். வழமை போலவே கிராமத்துப் பின்னணியில் அதிரடியாக உருவாகவுள்ள இந்தப்படத்தில் அஜித் ஜோடியாக வித்யாபாலன் நடிப்பார் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் விரைவில் வித்யா பாலனுக்குப் பதில் இப்போது பரிசீலனையில் இருப்பவர் ஹன்சிகா.




'பேங் பேங்' படத்தின் வெற்றிக்குப் பிறகு நடிகர் ஹிருத்திக் ரோஷன் 'மொகஞ்சதாரோ' என்ற வரலாற்றுப் படத்தில் நடித்து வருகிறார், இந்தப்படத்தை அசுதோஸ் கௌரிகர் இயக்குகிறார். முகமூடி படத்தின் நாயகி பூஜா ஹெக்டே, முதன்முறையாக ஹிந்திப் படத்தில், அதுவும் முதல்படத்திலேயே ஹிருத்திக் ரோஷனுடன் நடிக்கும் வாய்ப்பைப் பெற்று இருக்கிறார். இதன் படப்பிடிப்பு நடந்து வந்த நிலையில், ஹிருத்திக்குக்கு கையில் அடிபட்டுள்ளது. இதனால் அவரால் நடிக்க முடியாத் சூழல் ஏற்பட்டுள்ளது. படத்தில் நிறையச் சண்டைக்காட்சிகள் இருப்பதால், அதையெல்லாம் சரியாக எடுக்க வேண்டும் என்று இயக்குநர் நினைக்கிறார்.



# காயமடைந்த ஹிருத்திக்

தற்போதைய சூழலில் ஹிருத்திக்குக்கு கையில் அடிபட்டுள்ளதால் இப்போது சண்டைக்காட்சிகளை படமாக்கினால் அது சரியாக வராது என்ற காரணத்தினால், படப்பிடிப்பைத் தள்ளி வைத்துள்ளனர் மொகஞ்சதாரோ படக்குழுவினர்.

# கண் திறப்பாரா ரஜி



பாலாவின் 'பரதேசி' படத்
மூலம் அறிமுகமாகி 'மெட்ராஸ்
மேரி என்ற பாத்திரத்தில்பா
நடித்த ரித்விகாவுக்கு ரஜினி மற்
சூர்யாவுடன் ஒரு படத்திலா
வேண்டும் என்று ஆசையாம்.
அண்மையில் ஒரு தொலைக்க
பேட்டி ஒன்றின் போதே அவர்
ஆசையை வெளியிட்டுள்ளா
யோடு நடிக்கவேண்டும் என்று
நடிகைகளுக்கும் தான் ஆசை.
போம். ரித்விகாவுக்காவது ரஜி
திறப்பாரா என்று.

# பாவம் கார்த்திக்!

அலைகள் ஓய்வதில்லை படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர், நடிகர் முத்துராமனின் மகன் கார்த்திக். அதன்பின்னர் முன்னணி நடிகராக உயர்ந்து தமிழ் சினிமாவின் நவரசநாயகனாக வலம் வந்தார். இப்போது அவரது மகன் கௌதம் கார்த்திக்கும் சினிமாவில் நடிக்க வந்துவிட்டார். தற்போது அப்பாவும், மகனும் சினிமாவில் நடித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகர் கார்த்திக்குக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நீண்ட நாட்களாக சொத்து தகராறு நடந்து வருகின்றது. பிரச்சினை உச்சக்கட்டத்தை அடைந்ததால் நடிகர் கார்த்திக் திடீரென வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். தற்போது அவர் தனியாக தங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. இதுதொடர்பாக பொலிஸில் நடிகர் கார்த்தி புகார் ஒன்றை அளித்துள்ளார்.

அதில் அவர் கூறியுள்ளதாவது, ஆழ்வார்பேட்டையில் என் தந்தைக்குச் சொந்தமான சொத்துக்கள் உள்ளன.



இக்கச் சொத்தில் எனக்கு எதுவும் பங்கு கிடையாது என்று எனது சகோதரர் என்னை வெளியேறும்படி கூறுகிறார். மேலும் உயிலில் எனது பெயரும் இல்லை. எனது சகோதரர் எனது சொத்தை மோசடி செய்துள்ளார். அவரிடமிருந்து என் சொத்துக்களை மீட்டு தரும்படி கேட்டு கொள்கிறேன். எனக்கும் உரிய பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் என கூறியுள்ளார்.

# ஏனிந்தப் பொறாமை?

விஜய் எப்போதும் மிக எளிமையாகவும், அனைவருடனும் அன்பாக பழகக்கூடியவர். இவர் நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த படம் கத்தி, கேரளா ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது. இரண்டாவது வாரத்திலும் அரங்கு நிறைந்த காட்சிகளாக கத்தி கேரளாவில் ஓடிக்கொண்டிருக்கிறது. கேரளாவில் விஜய்யின் வளர்ச்சி சில நேரடி மலையாள நடிகர்களின் படங்களையே ஓரங்கட்டுகிறதாம். இதனால் விஜய் மேல் மிகுந்த கோபத்தில் உள்ளார்களாம் அவர்கள். ஒரு மொழிமாற்றுப்படத்துக்கு இந்தளவு வரவேற்பா என்று யோசிக்கும் மலையாளத் திரையுலகம், எதிர்காலத்தில் விஜயின் படங்கள் தமிழில் வெளியாகி ஒரு வாரத்துக்குப் பின்பே மலையாளத்தில் வெளியாக வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டுவர உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் மனைவி



இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா 3 ஆவது திருமணம் செய்ய இருக்கிறார். அவருக்கு கீழக் கரையை சேர்ந்த முஸ்லிம் பெண்ணுடன் திருமணம் நிச்சயமாகியுள்ளது. அரவிந்தன் படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் யுவன் ஷங்கர் ராஜா. இசைஞானி இளையராஜாவின் வாரிசான இவர், தொடர்ந்து படிப்படியாக முன்னேறி முன்னணி இசையமைப்பாளராக உயர்ந்தார். சமீ பத்தில் தனது 100ஆவது படமான பிரியாணி படத்துக்கு இசைய மைத்தார்.

யுவன் கடந்த 2005ஆம் ஆண்டு லண்டனை சேர்ந்த பாடகி சுஜாயாவை காதலித்து மணந்து கொண்டார். ஆனால் இவர்களது திருமணம் மூன்று ஆண்டுகள் தான் நீடித்தது, 2008இல் விவாகரத்துப் பெற்று இருவரும் பிரிந்தனர். இதனையடுத்து 2011ஆம் ஆண்டு ஷில்பா என்பவரை திருமணம் செய்து கொண் டார். அந்தத் திருமணமும் நீடிக்கவில்லை.இதனை யடுத்து இஸ்லாம் மதத்துக்கு மாறியிருந்த யுவன், முஸ்லிம் பெண் ஒருவரை மூன்றாவதாக மணம் முடிக்க உள்ளார்.

# பூஜாவுக்கு திருமணம்



இலங்கையைச் சேர்ந்த ஆடையலங்கார வடிவமைப்பாளரான தீபக் சண்முகநாதனை நடிகை பூஜா கரம் பிடிக்கவுள்ளார். அடுத்த ஆண்டு திருமணம் நடைபெறவுள்ளது.

இலங்கையில் பிறந்த பூஜா, சரண் இயக்கிய 'ஜே.ஜே' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகுக்கு அறிமுகமானவர் . அதனைத் தொடர்ந்து 'அட்டகாசம்', 'உள்ளம் கேட்குமே', 'பட்டியல்', 'ஓரம்போ' எனப் பல படங்களில் நாயகியாக நடித்திருக்கிறார். பாலா இயக்கத்தில் 'நான் கடவுள்' படத்தில் பார்வையற்ற மாற்றுத்தி றனாளியாக நடித்த பூஜாவுக்கு பாராட்டுக்கள் குவிந்தன. இவரது நடிப்பைப் பார்த்து ரஜினிகாந்த் தன் வீட்டுக்கு அழைத்து பாராட்டு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், பூஜா தற்போது இலங்கையில் ஆடையலங்கார வடிவமைப்பாளர் தீபக் சண்முகநாதனை காதலித்து வருகிறார். அடுத்த ஆண்டு இருவரும் திருமணம் செய்து கொள்ள இருக்கிறார்கள்.இதேவேளை பூஜாவின் ஆபாசக் காணொலி ஒன்று சில வருடங்களுக்கு முன்னர் வெளிவந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்மாவுக்கு ஆலயம்



நடன இயக்குநர், நடிகர், இயக்குநர் எனப் பல முகங்கள் கொண்டவர் லாரன்ஸ். தற்போது முனி-3 இல் தீவிரமாக நடித்து வருகிறார்.இவர் தன் தாய்க்கு கோயில் கட்டவுள்ளார். அதற்காக தனது தந்தை ஊரான பூவிருந்தவல்லி அருகில் உள்ள மேவலூர் குப்பம் என்ற ஊரில் இடம் தேர்வு செய்துள்ளார்.

அவரது அம்மாவின் உருவச் சிலை ராஜஸ்தான் மாநிலத்தில் வடிவமைக்கப்பட்டு வருகிறது.இது குறித்து லாரன்ஸ் கூறுகையில் 'தாயின் மனதே ஒரு கோயில் தான். அந்தத் தாய் வாழும் போதே கோயில் கட்டி பெருமைப்படுத்தவேண்டும் என்பதே எனது ஆசை' என்று கூறியுள்ளார்.

...த்தின்
...ஸ்' படத்தில்
...ட்டும்படி
...மற்றும்
...ான் நடிக்க

...க்காட்சிப்
...ர் தனது
...னி
...எல்லா
... பார்ப்
...னி கன்



தமிழில் ஆட்டோகிராப், கனாக் கண்டேன், எம்டன் மகன், வீராப்பு, வெள்ளித்திரை உட்பட பல படங்களில் நடித்தவர் கோபிகா. கேரளத்து நடிகையான இவர், தமிழில் நடித்தது குறைவான படங்கள் என்றாலும், தனக்கென ஒரு ரசிகர் வட்டத்தை உருவாக்கிக் கொண்டு,கடைசி வரை குடும்பப்பாங்காக மட்டுமே நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிடைத்தது ஆண்குழந்தை

மேலும், சினிமாவில் தீவிர மாக நடித்துக் கொண்டிருந்த போதே, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வைத்தியர் அஜிலேஷ் ஜாக்கோ என்பவரை 2008அம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். அதையடுத்து, எமி என்ற பெண் குழந்தை யைப் பெற்றெடுத்த கோபிகா, அதன் பின்னர்மலையாளத்தி லும் இரண்டு படங்களில் வித்தியாசமான பாத்திரங் களில் நடித்தார்.

இந்த நிலையில், மீண்டும் கர்ப்பமான கோபிகா, சினி மாவில் நடிப்பதை நிறுத்தி விட்டு ஆஸ்திரேலியாவி லேயே இருந்து வந்தார். கடந்த புதன்கிழமை காலை அவருக்கு அங்குள்ள தனியார் மருத்துவமனையில் ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டுபிடியுங்கள்

இந்த இரு படங்களுக்குமிடையே 05 வித்தியாசங்கள் உள்ளன.



சுடர் ஒளி

சிறுவர் சுடர்

## ஆட்டுக்குட்டி

துள்ளி வரும் ஆட்டுக்குட்டி
துணிந்து வரும் ஆட்டுக்குட்டி
பள்ளி செல்ல வருவாயோ?
பாடம் சொல்லித் தருவாயோ?

கள்ளம் இல்லை உன்மனதில்
கபடம் இல்லை உன்மனதில்
பள்ளம் மேடு எதுவந்தாலும்
பாய்ந்து ஓடும் ஆட்டுக்குட்டி.

தொல்லை இல்லா ஆட்டுக்குட்டி
தோல் கறுத்த ஆட்டுக்குட்டி
சொல்லைக் கேட்டு வீட்டையே
சுற்றி வரும் ஆட்டுக்குட்டி.



மழலைகளே...!

வர்ணங்களால் மெரு கூட்டுங்கள்



ஒருவர், -என்னது..?
மற்றவர்;-நிறைய் ஓட்டை இருக்குது என்று என் கதையை திருப்பிஅனுப்பிட்டாங்களே..?
ஒருவர்;;-கதை பேர் என்ன..?
மற்றவர்;- சல்லடை..!



## சின்னு மரம்

சின்னு மரம். உஷ் உஷ் என்ற சத்தமிட்டபடியே இருக்கும் இந்த மரம். காட்டின் நடுவிலே இருக்கின்றது. அனேகமாக எல்லா விலங்குக்கும் அணில் மரத்தைப் பற்றி தெரிந்து இருக்கும். அதன் பெயர் காரணம் தெரியாமல் போனாலும் அது எந்த இடத்தில் இருக்கிறது என எல்லோருக்கும் தெரியும். பக்கத்துக் காட்டில் இருந்து ஏதாவது விலங்கு இந்தக் காட்டுக்கு வந்து, வழி கேட்டால் சின்னு மரத்துக்கு முன்னால் போங்க , சின்னு மரத்துக்கு இரண்டாம் மரம் என மற்ற விலங்குகள் வழி காட்டும். அந்த அளவுக்கு சின்னு மரம் காட்டின் முக்கிய சின்னமாக க் கருதப்பட்டது.

அது சரி அது என்ன அணில் மரம். அந்தக் கதை ரொம்ப சுவாரஸ்யமா இருக்குமா? முன்னொரு காலத்தில் இதே மரத்தில் செம்பன், செம்பி என்று இரண்டு அணில் வாழ்ந்து வந்தது. அவர்களுக்கு சின்னு என்ற அழகான அணில் குழந்தை பிறந்தது. பிறந்த சில மாதங்களுக்கு இது மற்ற அணில்களை போல அமைதியாக நல்ல பிள்ளையாக தான் இருந்தது. ஓட ஆரம்பித்த பிறகு வால்தனம் வந்துவிட்டது. கொஞ்ச வால்தனம் எல்லாம் இல்லை, பயங்கர வால்தனம். எந்த மரத்துக்குச் சென்றாலும் சண்டை தான். சண்டை செய்தால் பரவாயில்லையே, அடாவடி செய்ய ஆரம்பித்துவிட்டது. குறும்பு செய்யும் குழந்தைகளை அனைவருக்கும் பிடிக்கும், ஆனால் அடாவடி செய்தால், அடம்பிடித்தால் யாருக்குத் தான் பிடிக்கும் சொல்லுங்க, மற்ற அணில்கள் விளையாடும் போது தான் மட்டும் தான் விளையாட்டில் வெற்றி பெற வேண்டும் என சொல்லும். வயதான காலத்திலும் செம்பனும் செம்பியும் சின்னுவுக்கு உணவினைத் தேடி எடுத்து வந்து தந்தனர். சின்னு ஒரு வேலையும் செய்யாமல் இருந்தது.

சின்னு என்ற பெயரை கேட்டாலே சக வயது அணில்கள் ஓடி ஒளிய ஆரம்பித்துவிட்டன. சின்னுவுக்கு நண்பர்கள் என்றே யாரும் இல்லை. இப்படி இருந்தால் எப்படி நண்பர்கள் கிடைப்பார்களாம்? இப்படி எல்லாம் செய்யக்கூடாது எனச் சொல்லும் தன் அம்மா அப்பாவையும் சில சமயம் விட்டுவைக்காது சின்னு. இந்தக் கவலையில் செம்பன் செம்பி இருவரும் மனம் வருந்தி இறந்துவிட்டனர்.

சரி பெற்றோர் இறந்த துக்கத்திலாவது சின்னு சரியாகிவிடும் என நினைத்த அனைவருக்கும் ஏமாற்றம் தான். அப்பா அம்மா உயிருடன் இருந்த போது கொஞ்சமாவது அவர்களுக்கு பயந்து இருந்தது. இப்போது அட்டகாசம் தாங்க முடியவில்லை. எல்லா அணிலும் கூடி ஒரு முடி வினை எடுத்தது. நாங்கள் அனைவரும் உனக்கு தினமும் வேண்டிய உணவினை தருகிறோம். இந்த மரத்தை விட்டு வரவே வராதே என்று வேண்டின.




அதன்படி தினமும், பழம், உணவு அனைத்தும் மரம் தேடி வந்தது. எந்த வேலையும் செய்யாமல் தினசரி உணவு உண்பதே வேலையாக இருந்தது. காடே அதிசயிக்கும் படி ஒன்று நிகழ்ந்தது. சின்னுவின் வால் நாளுக்கு நாள் நீண்டுகொண்டே போனது. காட்டில் இது தான் பேச்சு. சிங்கம், புலி, யானை, மான், பாம்பு என எல்லா உயிரினமும் இந்த அதிசயத்தை காண வந்தது.

மரத்தின் உச்சியில் சின்னு இருந்தால் தரை வரை வால் நீண்டுவிட்டது. மரத்தில் உயரம் முப்பது அடி இருக்கும், பெருத்த வால் இருப்பதால் நகர்ந்து செல்வதே சிரமமாகிவிட்டது. வால் எங்காவது சிக்கி கொள்ளும். காட்டிலே ஒரு காட்சி பொருளாகிவிட்டது சின்னு, மற்ற காடுகளில் இருந்துகூட விலங்குகள் வர ஆரம்பித்துவிட்டன.

தன் தவறுகளை எல்லாம் எண்ணி வருத்தப்பட்டது. அப்பா அம்மா சொல்லை கேட்கவில்லையே, யாருக்கும் மரியாதை தரவில்லையே என நினைத்து அழுதது. சின்ன சின்ன வேலைகளை மெதுவாக செய்ய ஆரம்பித்தது. உணவு கொண்டு வருபவர்களிடம் மரியாதையாக நடக்க ஆரம்பித்தது. நல்ல அணிலாக மாறிவிட்டது. சில மாதங்களில் அந்த பெரிய வால் மறைந்து சின்னு மற்ற அணில்களை போன்று மாறிவிட்டது. பொறுப்பு வந்தது. எல்லோரிடமும் நல்ல பெயர் எடுத்தது. ஆனந்தமாக வாழ்ந்தது. ஆனாலும் அந்த மரத்தின் பெயர் அப்படியே நிலைத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எவர்க்கானது இந்த உலகம்?

எனக்கானதென்பார் இந்த உலகம்
இல்லையில்லை எனக்கானதேயென்பார்
இன்னுக்கு சிலர்....
எமக்கானதென்பார் அற்ப சிலர்
இன்னுமின்னும் இந்த உலகம்
விந்தையோடு தான் விரிந்து கிடக்கிறது!

அந்தோ தனதென்ற அவனுமில்லை...
எனதென்ற இவனுமில்லை
எமதென்றோர் மட்டும்
இன்னும் மிச்சமாய்....
எனக்கென்று வாழ்வோர்-வீழ்வார்
ஓர் நாள்!
தமதென்று வாழ்வோர்
ஆள்வார் பல நாள்...

ஆற்றங்கரையில் ஆலமரம்
வீற்றிருந்தால் சென்று பாரும்
மற்றமில்லா மனத்தைத்திறவும்
நேற்று இழந்த காற்றையும்
முந்த நாள் பெய்த மழையையும்
பீற்றிக் கொள்ளும்!- அந்த நாளில்
எந்த நாளும் விந்தை தானே...!

பெய்த மழை இன்று பொய்த்தது!
ஆலமரத்துச் சாளரத்தில்
கோலமிட்டு வாழ்ந்த
குருவி,ஆந்தை,காகம்,குயில்
கூடும் விந்தை! எல்லாம் முந்தை!
கூடுமில்லை, குருவியில்லை
அருவியில்லை- ஆதலால்
ஆறும் இலல்லை ஆல் மரமும்
இல்லை....!

தெருவின் மரங்கிலுள்ளோர்
புழுதி முழுகி நின்றோர்
வெயிலில் வெளியில் நின்றார்
உருகி வியர்த்து வெந்தோர்!

தம்பி நீர் அருகில் வாரும்!
அட நீர் தான்...!
எனது என்றீரே?
எது உமது??
புழுதியோ,புழுக்கமா?
புழுக்கமில்லாப் பூமியா
பதில் சொல்லும்...
அறிந்தால் எனக்கானதென்று
இனியாவது நில்லும் ....
உண்மையொரு உலகை
வெல்லும்...!
தன்மையெழில் கொண்ட
பொழில் ஒன்றை
சிருஷ்டியும்...!
பகுத்தறிவாளன் நீர்
படைக்கவும் முடியும் உம்மால்!
உடைக்கவும் முடியும்!

-பாரோ,

# கவிதைப்புனல்



## பச்சோந்திகளாய்

மௌனமே
விரமாகிப் போன
வாழ்வில்
எதைப் பேச
தண்ணீர்
ஊற்றியதுக்குத் தான்
தெரியும்
பட்டுப் போன
மரத்தின் வலி
தூக்கிச்
சுமந்தவனுக்குத் தான்
தெரியும்
சுமையின் பாரம்
பச்சோந்திகளாக
இன்று சிலரின் வாய்ப்பேச்சு
அறிக்கைகளை
கேட்கையில்
அழுவதா? சிரிப்பதா
எதுவும்
புரியவில்லை எமக்கு

-வேலந்தந்தன்,
புலோலியூர்.



## புதுமைப்பெண்

ஏழைப் பெண்களாக- நாம்
பிறந்தது பாவமா?
வாழ்ந்திடும் ஆசை - நாம்
கொண்டது பாவமா?

சீதனக் கொடுமையில்
சிக்கிய பெண்களில்
சிதறும் கண்ணீர்த் துளிகளுக்கு
விடிவது எப்போது?

பெண் பார்க்கும் படலத்தில்
பொம்மைகளாக பலர் முன்னே
எத்தனை தினம் தான்
காட்சிப் பொருளாக காட்சியளிப்பது?

கல்யாண சந்தையிலே
கை நிறையும் பணத்துக்கு
கச்சிதமாக விலைபோகும்
கலை கொண்ட ஆடவரே!

சுகத்துக்கு பெண் தேடும்
உங்களுக்கு
அவள் சோகத்தை புரிய வைக்க
வீறு கொண்ட வேங்கைகளாக
புறப்பட்டு விட்டனர்
பாரதியின் புதுமைப் பெண்கள்

-வன்னியூர் சோபா,
விசுவமடு.

## ஊமைக் காலங்கள்

ஊமை விழிகள் கரைகிறது
உதய மனங்கள் அழுகிறது
காலை விழித்த பின்பும்
கனத்த மனங்கள்
நோகிறது

நேற்று வந்த
செய்தியலையில்
பதிவேற்றம் செய்யப்படாத
கலவைகள்

அவள் உள்ளத்திலிருந்து
வந்ததா?
உதட்டிலிருந்து
வந்ததா?
ஆராய்ந்து பார்த்தே
என் காலங்கள் மாள்கிறது

-வே.வே.அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் ஒரு தீபாவளி

# நரகாசூரன்கள் மீள வந்த நாள்

மாலினி

அன்றும் அரியாலையில் இப்படித்தான் ஒரு தீபாவளி நாள். எங்களுக்கு முற்பட்ட தலைமுறையின் தீபாவளி போலோ அன்றி இன்றைய தீபாவளி போலோ அன்றி, அது மிக ஆரவாரமான தீபாவளி. இந்தச் சாதாரண வெடிகளும் சக்கர வாணங்களும் இல்லாமல் , எங்களுக்காக அன்று ஷெல்கள் வெடித்து., விமானங்கள் குண்டு போட்டு மிகப் பெரும் சத்தத்துடன், ஆடம்பரமான வான வேடிக்கைகளுடன் ஆரம்பித்து வைக்கப் பட்ட தீபாவளியின் அதிகாலைப் பொழுது.




அன்று நாங்கள் காலையில் எழுந்து குளித்து முழுகி, புது உடுப்புப் போட்டுக் கோவிலுக்குப் போகவில்லை. குளிக்காமல், முழுகாமல் பலநாள் போட்ட பழைய உடுப்புடன் வியர்வை நாற்றத்தோடு கோவிலில் தான் இருந்தோம். பட்சணங்கள் வேண்டாம். பசிக்கு ஒரு வாய் உணவு தானும் இல்லை. கோவில் களஞ்சிய அறையில் நைவேத்தியத்துக்காக இருந்த சொற்ப அரிசியையும் ஒவ்வொருநாளும் ஒரு நேர நீர்க்கஞ்சிக்காக உபயோகித்து முடித்து இரண்டு நாள்களாகியிருந் தன. விடியும் ஒவ்வொரு பொழுதும், கடக்கும் ஒவ்வொரு கணமும் இது தான் கடைசி என்று எண்ண வைத்துக் கொண்டிருந்த பொழுதில் உறவுகள் கூடியிருந்தது மட்டுமே பண்டிகை போல்.

சுற்றி எங்கும் ஒலித்த வேட்டொலிகள் அதிகாலைப் பொழுதில் அடங்கியிருந்தன. .இராணுவம் எங்கே நிற்கின்றது என்ற அரவம் தெரியவில்லை. காட்டில் அரவங்களைக் காட்டிக் கொடுக்கும் ஆட்காட்டிக் குருவிகளின் வேலை, நாட்டில் நாய்களுக்கு. அவைகளின் குரைப்பொலி தான் எமக்கான பாதுகாப்பு எச்சரிக்கை. அதை அன்று அவர்களும் அறிந்திருந்தார்கள். மனிதருக்கு முன் நாங்கள் வளர்த்த நாய்களையே துப்பாக்கிக்கு இரையாக்கி, எங்கள் வீடுகளின் கிணறுகளுக்குள் வீசியோ, அன்றி எமது அடுப்புக்களுக்குள் அமுக்கி வைத்து விட்டோ சென்றார்கள். போர் நேரத்திலும் இந்தப் போக்கிரித்தனம் சீருடைகளுக்கு மட்டும் தான் கை வருமோ என்னவோ. எங்கள் வீட்டு அடுப்புக்குள் இருந்து எமது வளர்ப்புப் பிராணிகள் புழுவாகி வாசல் வரை வந்து வரவேற்று நெஞ்சில் நெருப்பேற்றி வைத்ததும், பக்கத்து வீட்டுப் பாட்டி, ஏராளம் நிலத்துக்குச் சொந்தக்காரி வெறும் நிலத்தில் இற்றுப் போய்க் கிடந்ததும் மனதில் பதிந்த பல நினைவுகளில் சிறு துளிகள்........

அதிகாலை வெடிச்சத்தங்கள் அடங்கியிருந்ததில் இராணுவம் எதுவரை வந்து விட்டார்கள் என்று தெரியவில்லை. வழமைபோல் ஆளை ஆள் தெரியாத இருட்டுப் பொழுதில் இயற்கை உபாதைகளுக்காக கோவிலை விட்டு இறங்கி அருகில் உள்ள வெறும் காணிகளை நோக்கிச் சென்ற யாரும் திரும்பி வரவே இல்லை. கிராமம் என்பதே உறவுகளின் கூட்டமாக இருக்கும். அதிலும் அயல் வீடுகளாகவும், அடுத்தடுத்த வீடுகளாகவும் இருப்பவர்கள் நெருங்கிய உறவுகளாகவே இருந்தார்கள். அனைவரும் அருகில் உள்ள கோவில் என்று ஒரே இடத்தில்-பாதுகாப்புக்காக குழுமியிருக்க, அங்கே வைத்து உறவுகளை முடித்து வைத்தது ஓசை அமுக்கி வெடிக்கப் பட்ட வேட்டுக்கள். வேட்டொலி கேட்காததால் எந்தச் சந்தேகமும் இல்லாமல் எஞ்சியவர்களும் இறங்கிப் போய் மாண்டுகொண்டிருந்த நேரம் சூரியன் உதிக்கையில் அவர்கள் எங்கள் அஸ்தமனத்துக்கான நேரத்தை நிறுத்தியிருந்தார்கள்.

எந்த அரவமுமே இல்லாத பொழுதில் இராணுவம் பதுங்கிக் கொண்டு தங்கள் இருப்பிடத்தை மறைத்துக் கொண்டிருந்தது. இந்த நேரத்தில் எங்கள் ஊர் பிள்ளையார் கோவிலில் பண்டிகைக் கால விசேஷ பூஜைகள் அன்று நடக்கவில்லை. எனவே நித்திய பூஜையாவது செய்ய வேண்டும் என்ற நிலையில், அருகே இருந்த அம்மன் கோவிலில் தீபாவளி விசேட பூஜை ஏதாவது செய்ய வாய்ப்பிருக்கிறதா என்று விசாரித்து விட்டுச் செல்வதற்காக குருக்களின் மகன் சைக்கிளில் வந்தார். காவி நிற வேட்டியும் கழுத்திலிருந்து தோள் வழி இறங்கிய பூணூலும் உடலைச் சுற்றி மூடிய காவி அங்க வஸ்திரமும் சிங்கள பௌத்த இராணுவத்துக்குப் புரியாமல் போகலாம் , இந்திய இந்து இராணுவத்துக்கு எப்படிப் புரியாமல் போனது?

பக்கத்து மதிலுக்குள் மறைந்திருந்து கோவில் வாசலில் அந்த இளைஞனைச் சுட்டு குப்புற விழுத்தும் அளவு ஒரு குழுக்களிடம் இருந்த கோபம் என்ன? ஒரு கோவிலைச்சுற்றி வயதானவர்கள், குழந்தைகள்,பெண்கள் என்ற எந்த வேறுபாடுமின்றி வீசி எறிந்த வெற்றுப் பேப்பர் போல் சிதறிப் போடப்பட்டிருந்தார்கள். அன்று எங்களூரில் எந்தக் கோவிலிலும் பூஜை நடக்கவே இல்லை.

சில நாள்கள் கழித்து, கோவிலுக்குள் விரல் விட்டு எண்ணக்கூடிய தொகையினரே எஞ்சியிருக்க, மிகுதிப் பேர் எல்லாம் வீதியில் சடலங்களாகக் கிடந்தனர். இனி இதற்குள் இருந்தாலும் சாவுதான் என்ற கடைசி நேரச் சலிப்பில் உயிர் வெறுத்து இராணுவத்துக்கு நடுவே வீதியில் இறங்கி நடந்தோம். கூடி நடந்தவர்களும், கொஞ்சி வளர்த்தவர்களும், கற்றுக் கொடுத்தவர்களும் கோவில் வீதியிலும் சுற்றுப் பரப்பிலும் இறந்து கிடந்தனர். மழையில் நனைந்து, விறைத்து அலங்கோலமாக அவர்களின் சடலங்கள் கிடக்க, மனம் இறுகியது. அந்த நினைவுகளோடு நகர்ந்து போனது சிறுவயதில் இருந்து நெஞ்சில் பதிந்திருந்த தீபாவளி பற்றிய இனிய நினைவுகள்!!!!!



## உணர்வின் ஊற்று - 20

வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்பு பவர்களா? அப்படியா யின் உங்களுடைய கவி யாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகியிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும்போது உங்கள் மனதில் எழும் உணர்வுகளை 10 வரிக்குள் கவிதையாக்கி அனுப்புங்கள்.

**அனுப்பவேண்டிய முடிவுத் திகதி : 17.11.2014** தரமானவை பிரசுரிக்கப்படும்.

முகவரி: **உணர்வின் ஊற்று - 20**

**சுடர் ஒளி** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு நேர்ந்த இக்கட்டான சூழ்நிலை குறித்து அமெரிக்காவுக்குத் தெரிவித்து இனி என்னால் தகவல்கள் தர இயலாது என்று சொன்ன சிகர்துர், வொஷிங்டன் வரவழைக்கப்பட்டு அவனது மூளையில் இருக்கும் மிச்சச் சொச்சத் தகவல்களும் சுத்தமாக சுரண்டி எடுக்கப்பட்டன. இந்தமுறை சிகர்துர் மூலம் குறித்த தகவல்களோ அல்லது கேள்விகளோ சிகர்துரிடம் கேட்கப்படவில்லை. அமெரிக்கப் பாதுகாப்பு அமைப்புகளின் வரலாற்றில் மிகப்பெரிய தகவல் கசிவு விக்கிலீக்ஸ் வெளியிட்ட ஸ்ரட்போர் மின்னஞ்சல்கள் மற்றும் சிரியாவின் உள்நாட்டு கலவரத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டலாத ஹக்கிங் நிபுணரும், தீவிர இணையப் போராளியுமான ஜெரொமி ஹமண்ட், ஸ்ரட்போர் மின்னஞ்சல்கள் வெளியிட்ட விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டு பத்தாண்டுகள் சிறைத் தண்டனையும், சாபுவுடன் தொடர்பில் இருந்த கேலாரயான் 30 மாத சிறை தண்டனையும் அனுபவித்துக் கொண்டிருப்பது உபரித்தகவல்.

**சுடுதண்ணி**

உள்துறை அமைச்சர்.

2012 மார்ச் மாதத்தின் கைதுச் சூறாவளிக்குப் பிறகு பல மர்ம மரணங்கள் இணைய உலகை உலுக்கத் தொடங்கின. அவர்கள் அனைவருமே ஒரு வகையில் இணைய சுதந்திரத்தில் பாதுகாப்பின் பெயரில் கைவைக்கும் அமெரிக்க அரசுக்கு எதிராகக் கொடிபிடித்தவர்கள்.

எப்.பி.ஐ, என்.எஸ்.ஏ மற்றும் சி.ஐ.ஏ அமைப்புகளின் கையில் அனானிமஸ் மற்றும் விக்கிலீக்ஸுடன் தொடர்புடையவர்களாக மாட்டியவர்கள் யார் யாரென்பது சம்பந்தப்பட்ட தலைகளுக்கே வெளிச்சம். சிலவேளை யாரென்றே தெரியாமல் தங்கள் அடையாளங்களை மறைத்து செயற்பட்டவர்களாகக் கூட அவர்கள் இருக்கலாம் என்று பெரிதும் நம்பப்படுகிறது. அவ்வாறு மரணித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பத்திரிகையாளர் மைக்கேல் ஹேஸ்டிங், நாம் முதன் முதலில் பார்த்த இணைய ஆர்வலர் ஆரோன் ஸ்வார்ட்ஸ், உலகப்புகழ் பெற்ற ஹேகிங் மன்னன் பெர்னபி ஜக் ஆகியோர். இவர்கள் அனைவரின் மரணத்துக்கும் உள்ள ஒற்றுமை இறப்பதற்கு சில நாள்களுக்கு முன்னதாக அமெரிக்க உளவு அமைப்புகளால் விசாரணைக்கோ அல்லது கண்காணிப்புக்கோ உள்ளாக்கப்பட்டவர்கள்.

# இரைதேடும் இணைய வலை

விக்கிலீக்ஸுடன் தொடர்பில் இருக்கும் அத்தனை நபர்களும் கவனமாகப் பதிவு செய்து சக்கையாக அனைத்துத் தகவல்களையும் கறந்து ஐஸ்லாந்தில் துப்பப்பட்டார் சிகர்துர். அடுத்த சில நாள்களில்- 2012 மார்ச் மாதம்- வரிசையாகக் கைதுக் காட்சிகள் அரங்கேறின. லல்செக் ஹேக்கிங் குழுவின் நிறுவுநர்களில் ஒருவரும் சாபுவின் நெருங்கிய கூட்டாளியுமான ஜெரொமி ஹமண்ட் (Jeremy Hammond) அமெரிக்காவிலும், சிகர்துருடன் தொடர்பில் இருந்த கேலா இங்கிலாந்திலும் வைத்துக் கைது செய்யப்பட, அதன் பின் ஊடகங்களில் வெளியான செய்திகளில் சிகர்துருக்கு பல ஆச்சரியங்கள் காத்திருந்தன.

16 வயதே ஆன பெண்ணாக ஹக்கிங் உலகில் அறியப்பட்ட கேலா உண்மையில் 25 வயது ஆண் ரயான் (Ryan Ackroyd) என்பதும், ஜெரோமி ஹமண்ட் குறித்துத் தகவல் கொடுத்தது சாபு தான் என்பதும், அதற்கு ஒரு வருடத்துக்கு முன்பே 2011 ஜூன் மாதம் சாபு அமெரிக்க உளவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு ஆள்காட்டிக் கொடுக்க சம்மதித்த காரணத்தால் ரகசியமாகப் பிணையில் விடுவிக்கப்பட்டு ஹக்கிங் உலகில் பயணிக்க விடப்பட்ட உளவாளி என்பதும் தெரிய வந்த சிகர்துருக்குப் பேரரசின் திரைப்படம் பார்த்ததைப் போன்ற பாதிப்பில் கன்னாபின்னாவென தலைசுற்றிக் கிறங்கினாலும் அப்பொழுது தான் பல விஷயங்கள் தெளிவாகின.

ஒவ்வொரு முறையும் சிகர்துர் எப்.பி.ஐ இடம் சாபு குறித்த தகவல்களை அளித்த போதும் மேற்கொண்டு அது

நேரத்தில் இரட்டை வேடம் போட்ட அத்தனை பேரையும் அம்பலப்படுத்திய விக்கிலீக்ஸின் சிரியா கோப்புகள் ஆகிய இரண்டும் அமெரிக்க உளவு



அமைப்பு களுக்குத் தெரிந்தே விக்கிலீக் ஸுக்குக் கையளிக்கப்பட்டிருக் கிறது. தன் கோவணம் காற்றில் பறந்தாலும் ஜூலியனைக் கையும் களவுமாக நேரடியாக அமெரிக்க சட்டப்படி குற்றவாளியாக நடக்க வைத்து, சிறைபிடிக்க

**16 வயதே ஆன பெண்ணாக ஹக்கிங் உலகில் அறியப்பட்ட கேலா உண்மையில் 25 வயது ஆண் ரயான் (Ryan Ackroyd) என்பதும், ஜெரோமி ஹமண்ட் குறித்துத் தகவல் கொடுத்தது சாபு தான் என்பதும், அதற்கு ஒரு வருடத்துக்கு முன்பே 2011 ஜூன் மாதம் சாபு அமெரிக்க உளவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு ஆள்காட்டிக் கொடுக்க சம்மதித்த காரணத்தால் ரகசியமாகப் பிணையில் விடுவிக்கப்பட்டு ஹக்கிங் உலகில் பயணிக்க விடப்பட்ட உளவாளி என்பதும் தெரிய வந்த சிகர்துருக்குக் பேரரசின் திரைப்படம் பார்த்ததைப் போன்ற பாதிப்பில் கன்னாபின்னாவென தலைசுற்றிக் கிறங்கினாலும் அப்பொழுது தான் பல விஷயங்கள் தெளிவாகின.**

விரிக்கப்பட்ட வலைதான் இத்தனை நாடகங்களும், காட்சிகளும். குற்றத்தினை நடக்காமல் தடுக்க வேண்டிய அமெரிக்க பாதுகாப்பு அமைப்புகளே அவற்றை நடக்க வேடிக்கை பார்த்த விதம் அனைவருக்கும் ஆச்சரியத்தையும், ஜூலியன் மேல் அமெரிக்க வைத்திருக்கும் குறியின் தீவிரத்தையும் புரியவைத்தது.

சாபுவுக்கு சற்றும் குறைவில்

அது வரை ஏகப்பட்ட சட்டச் சிக்கல்களைச் சந்தித்தாலும், சளைக்காமல் சமாளித்து லண்டனில் பிணையில் வெளிவந்திருந்த ஜூலியன் மேற்படி சம்பவங்களுக்குப் பின்னர் இதற்கு மேல் ரத்த பூமியில் உலவ முடியாது என்று முடிவு செய்து ஈக்குவடோர் தூதரகத்தில் அரசியல் தஞ்சம் கேட்டு குடியறியதில் இருந்து இவற்றின் பின்விளைவுகளால் ஜூலியன் தலைக்கு வரவிருந்த ஆபத்தினை உணரலாம். அன்று தூதரகத்தில் உள்நுழைந்த ஜூலியன் இன்றும் வெளிவரவில்லை.

கையாடல் செய்ததாகச் சொல்லப்பட்ட பணம் ஜூலியனின் அனுமதியுடன் தன் கைச்செலவுக்கு எடுத்தது என்று சிகர்துரும், சிகர்துர் சொல்லும் அளவுக்கு ஜூலியனோ அல்லது விக்கிலீக்ஸ் நபர்கள் யாருமோ சிகர்துரை அளவுக்கு மீறி நம்பவில்லை என்று கிறிஸ்டைனும் முன்னுக்குப் பின் முரணாக சொன்னாலும், விக்கிலீக்ஸ் குறித்து சிகர்துர் தான் எப்.பி.ஐ இடம் போட்டுக் கொடுத்தது என்று ஜனவரி மாதம் 2013க்குப் பிறகு தான் ஜூலியனுக்கும், கிறிஸ்டைனுக்கும் சந்தேகத்துக்கு இடமின்றி ஊர்ஜிதமானது. தகவல் உபயம் - கிறிஸ்டைனின் நண்பரான ஐஸ்லாந்தின் முன்னாள்

இணையப் போராளிகளுடன் கண்ணாமூச்சி ஆடி, ஆடி அலுப்பில் இருந்த அமெரிக்க பாதுகாப்பு அமைப்புகளின் பயணத்தில் மிகப்பெரும் திருப்பு முனையாக அமைந்தது சாபுவின் கைது. ஊரே வியந்து பார்க்கும் ஹக்கிங் சாகசக்காரரான சாபு, கைதவறி தன் அடையாளத்தினை மறைக்காமல், தனது உண்மையான வலையமைப்பு எண்ணுடன் இணையத்தில் ஒரே ஒரு முறை இணைந்தது தான் மாட்டி கொண்டதற்கான காரணம். அத்தனை துல்லியமாக வைத்த குறி தப்பாமல் இணையத்தில் யாரையும் கண்டுபிடிக்க முடியும் என்பதற்கு சாபுவின் சம்பவம் சாட்சி. சிகர்துருக்கோ அல்லது சாபுவுக்கோ தாங்கள் அளித்த தகவல்கள் மூலம் நடக்கப் போகும் விபரீதங்கள் குறித்து தெரிந்திருக்கவில்லை. இதில் தப்பியவர்கள் ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சம் புகுந்த முன்னெச்சரிக்கைப் புலியான ஜூலியனும், ரஷ்யாவில் தஞ்சமடைந்திருக்கும் எட்வர் ஸ்நோடனும் மட்டுமே. (வலை விரியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

05.11.2014 ~11.11.2014

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்**



உடன் பிறந்தவர்களின் செயல், மனவருத்தம் தரும். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரரின் விருப்பத்தை இயன்ற அளவில் நிறைவேற்றுவதால், குடும்பத்தில் ஒற்றுமை பலம்பெறும். உடல் நல ஆரோக்கியம் சீராகும். கூடுதல் உழைப்பு தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி தரும். பணியாளர்கள் ஆர்வமுடன் செயல்படுவதால், பணி இலக்கு நிறைவேறும். பெண்கள், குடும்பசெலவில் சிக்கனம் பின்பற்றவும். மாணவர்கள், விரும்பிய பொருள் வாங்குவதற்கு அவசரப்பட வேண்டாம்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**ரிஷபம்**



நல்லோரின் ஆலோசனை, ஆதரவு கிடைக்கும். சிலர் புதிய வாகனம், வீடு வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர், படிப்பில் சிறந்து வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெறுவர். எதிரியினால் தொல்லை வராத சுமுக வாழ்வு ஏற்படும். இல்லறத்துணையின் செயல்களில் சிறு அளவில் குளறுபடி வரலாம். தொழில், வியாபார வளர்ச்சிக்கான முக்கிய பணி நிறைவேறும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**மிதுனம்**



வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும். மகளின் ஜாதகயோகபலன் முக்கியமான நன்மை ஒன்றை பெற்றுத்தரும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். இல்லறத்துணையிடம் கருத்து வேறுபாடு வராமல் நடந்து கொள்ளவும். தொழில், வியாபாரம் சீராக அமைய சிலமாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள், தம் கடமை உணர்ந்து பணிபுரிவது நன்மை தரும். பெண்கள், தாய்வீட்டு உதவி கிடைத்து மகிழ்வீர்கள்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்**



அக்கம் பக்கத்தவர் கூடுதல் அன்பு பாராட்டுவர். உறவினர் வருகை மகிழ்ச்சியை தரும். புத்திரர், அறிவாற்றலில் சிறந்து புதிய சாதனை நிகழ்த்துவர். உங்களின் சமூக அந்தஸ்து கண்டு, எதிர்மனப்பாங்கு உள்ளவர் வியந்து விலகுவர். இல்லறத்துணையின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் வருகையால் வளர்ச்சி பெறும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்றுக் கொள்வீர்கள்.

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சிம்மம்**



நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். பணவசதி திருப்திகர அளவில் இருக்கும். அவமானப்படுத்த முயற்சிப்பவரிடம் இருந்து விலகுவது நல்லது. புத்திரர், சில விஷயங்களில் முரண்பட்ட கருத்து கொள்வார். தொழில், வியாபாரம், செழித்து உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்க அனுகூலம் உண்டு.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**கன்னி**



சந்தேகம் தெளிந்த சில விஷயங்களை, மீண்டும் அலசி ஆராய்ந்து மனதை குழப்ப வேண்டாம். வாகனத்தை பராமரிப்பு செய்வதால், பயணம் எளிதாக அமையும். புத்திரர், சில விஷயங்களில் பிடிவாதம் கொள்வர். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**துலாம்**



வெளியூர் பயணம் பயன் கருதி மேற்கொள்வீர்கள். வீட்டிற்கு வரும் உறவினர்களை இயன்ற அளவில் உபசரிப்பீர்கள். புத்திரரின் நிறை, குறையை அதிகம் விமர்சிக்க வேண்டாம். எதிரி, தம் சொந்த சிரமங்களால் விலகிப் போவர். இல்லறத்துணை, குடும்ப வாழ்வு நலம் சிறக்க அக்கறை கொள்வார். தொழில், வியாபாரம் சீராக புதியவர்களின் உதவி கிடைக்கும். பணியாளர்கள், தொழில் நுட்ப அறிவை வளர்த்துக்கொள்வீர்கள்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்**



வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும். புத்திரர், ஆன்மிகம் தொடர்பான செய்திகளை அறிவதில் ஆர்வம் கொள்வர். எவருக்காகவும், பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். இல்லறத்துணையின் நல்ல ஆலோசனை, வாழ்வியல் நடைமுறை சிறப்பு பெற உதவும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறுகளை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை தவறாமல் பின்பற்ற வேண்டும்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு**



குடும்ப உறுப்பினர் விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி, குதூகலம் வளரும். புத்திரரின் செயல் குறையை கண்டிப்பதில், நிதான அணுகுமுறையை பின்பற்றவும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற தேவையான அனுகூல காரணி பலம் பெறும். பணியாளர்கள், குறித்த காலத்தில் இலக்கு நிறைவேற்றுவீர்கள்.

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

**மகரம்**



உடன்பிறந்தவர்களுக்கான மங்கள நிகழ்ச்சி நடத்த, காலம் கனிந்து வரும். நீண்ட தூர வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர், தம் நண்பர்களுடன் மனக்கிலேசம் கொள்வர். உங்களின் ஆறுதல் வார்த்தை சாந்தப்படுத்தும். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். இல்லறத்துணையின் மனதில் வாழ்வியல் நம்பிக்கை வளர உதவுங்கள். தொழில், வியாபாரம் செழித்து, உபரி பணவரவு கிடைக்கும்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**கும்பம்**



அக்கம், பக்கத்தவருடன் பெற்ற நற்பெயருக்கு, குறை வராமல் நடந்து கொள்வது நல்லது. தாய்வழி உறவினரால் சில நன்மை கிடைக்கும். புத்திரரின் உடல் நலத்திற்கு, சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை உதவும். அத்தியாவசிய செலவுக்காக கெடுபிடி குணம் உள்ளவரிடம் பணக்கடன் பெற வேண்டாம். இல்லறத்துணை, கூடுதல் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்**



அதிக விலையுள்ள பொருளை கவனமுடன் பாதுகாக்க வேண்டும். உறவினர்களுடன் இருந்த மனக்கிலேசம் விலகி, சுமுக நிலை உருவாகும். பூர்வ சொத்தில் பெறுகிற பணவரவு கூடும். புத்திரரின் ஒவ்வொரு சொல்லிலும் நேர்மை, சத்தியம் நிறைந்திருக்கும். எதிரி பலமிழந்து போவர். இல்லறத்துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர நல்லோரின் உதவி கிடைக்கும்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 59

திருமணம் புரிவதற்காக மதி எமது வீட்டிலிருந்து புறப்பட்ட கையோடு அங்கிருந்த மீதி இளம் பெண்கள் 1984 ஒக்ரோபரில் திருச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். விடுதலைப்புலிகளின் பெண்கள் பிரிவுக்கான முதல்ராணுவப் பயிற்சித் திட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள்.

இளம் பெண்களின் பயிற்சி முகாம் மதுரைக்கு இடமாற்றம் பெற்றதும், நாம் வசித்த அந்தப் பெரிய வீடு வெறிச்சோடிக் காணப்பட்டது. அவ்வளவு பெரிய வீடு. தேவையாகவும் இருக்கவில்லை. எனவே எம் இருவருக்கும் அடக்கமான சிறிய வீடு ஒன்றைத் தேடத் தீர்மானித்தோம். சென்னைப் புற நகரான பெசன்ற் நகரில் கடலோரமாக கச்சிதமான இரண்டு படுக்கையறை மாடி வீடொன்றை எமது நண்பர் நேசன்தேடிப் பிடித்தார். இங்கே பாலா, தமது ஆழமான ஆசை ஒன்றுடன் மீளாத் தொடர்பு கொண்டார். இயற்கையுடன் ஒன்றிப் போகும் ஆசையே அது. எனக்கும் சிக்கல் குறைந்த ஒரு சூழலில் அமர்ந்து கடந்த ஆண்டின் சிக்கல்களை ஒவ்வொன்றாக அவிழ்க்க வாய்ப்புக் கிடைத்தது. இந்த வீட்டில் மூன்றாமவர் ஒருவரும் எம்மோடு இணைந்து கொண்டார். எமது நாய் ஜம்மியே அது. இடையிலே இரண்டே இரண்டு ஆண்டுகள் மட்டும் எம்மிடம் இருந்து பிரிந்து வாழ்ந்த ஜம்மி, தனது பதினைந்து ஆண்டு ஆயுள் காலத்தின் கடைசிச் சில மாதம் வரை, எம்முடனேயே சீவித்தது. அமைப்பின் அலுவலகங்களில் ஒன்றுக்கு ஒருநாள் பாலா போயிருந்த போது, அங்கே தன்னைக் கட்டி வைத்திருந்த சங்கிலியைப் அறுக்க முயன்று கொண்டிருந்த ஒரு நாய்க்குட்டியைக் கண்டிருக்கிறார். அது சிறைப் படுத்தப்பட்டிருப் பதையும் அதன் முனகல் முறுகலையும் சகிக்க முடியாது, வீட்டுக்கு கொண்டு வந்திருக்கிறார். அந்த மென் பந்து மூட்டையை என்னிடம் நீட்டி "இது உமக்குத் தான்; உமக்கு வீட்டுத் துணையாக ஒரு நண்பன்" என்று ஒப்படைத்தார். அவர் சொன்னது பலித்தது. ஜிம்மி ஒரு உண்மையான நண்பனாக மாறியது. வேண்டும் என்று புரியாத சிறு கொடுமைகளையும் மன்னித்தது; என்றுமே பொறுமை



காத்தது; முழுமையாக என்னை நம்பியது. ஜிம்மி ஊடாகவே, விலங்கு உலகத்தினூடாகப் பயணம் புரிந்தேன். விலங்குகளை மதித்தேன்; இறுதியில் சைவ உணவையே அருந்தத்தொடங்கினேன். ஓராண்டு ஆகிய பின், இப்போது இந்த நாய்க்குட்டியின் கபடம் இன்மை புத்துயிர் அளித்தது; அதனுடைய தேவைகளை நிறைவேற்ற முற்பட்ட போது, எமது வீட்டுக்கு முன்பாக இருந்த கடற்கரையில் இயற்கையை அனுபவிக்கும் வகையில் கூடுதலான நேரம் செலவிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் நாம் உள்ளாக்கப்பட்டோம்.

இந்தியாவிலும் சரிஇலங்கையிலும் சரி, அன்றாட வாழ்க்கையில் ஒரு மகிழ்ச்சியான நிகழ்வு என்னவென்றால், அதிகாலையில் துயிலெழுவதே. இந்தியாவில் சூரியோதயம் என்பது பருவத்துக்கு பருவம் மாறாது. ஒவ்வொரு நாளும்காலையில் 5.30 இற்கும் 6.00 ற்கும்இடையே சூரியன் உதித்து விடும். ஆகவே துயில் எழுவதில் பிரச்சினை இராது. இங்கு காலை 3.30 இற்கே துயில் எழுந்து விடுவார்கள். காலையில் 4.00 மணிக்கு விழிப்பதை நியாயமான நேரமாகக் கொள்வார்கள். பெண்கள் அதிகாலையில் எழுந்து, வீடு வளவைத் துப்பரவாக்கி, காலை ஆகாரம் தயாரிப்பது போன்றவற்றில் ஈடுபடுவார்கள். சிலர் விடியு முன் எழுந்து, பகல் வெயில் ஏறும் முன்எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு வேலை செய்து முடித்து விடுவார்கள்.

(பதிவு தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.சு. முரளிதரன்

# கவந்தம்

**இரும்புப் பூண் புனைந்த தந்தங்களுடைய களிறுகள் ஆற்றங்கரையில் மெதுவாக நடந்து சென்றன. வைகைக் கரையில் கம்பீரமாக் காட்சி கொடுத்த சிலை கவந்தமாக நின்றது. தலை போன இடம்புரிதலுள் அடங்கவில்லை. தலை பற்றி புனைவுகள் புற்றீசலாக வெளிக் கிளம்பின. கவந்தத்தோடு எந்தக் காலத்திலும் எந்தத் துண்டமும் பொருந்தப் போவதில்லை என்பது மட்டும் புரிந்தது.**

சிறுகதை



“ஆறு பெருகுகிறது! ஆறு பெருகுகிறது!! அணை கட்ட எல்லோரும் வாருங்கள்”

அரிமர்த்தன பாண்டியனின் சேவகர்கள் ஊர் ஊராகச் சென்று அறிவித்தனர். ஆற்றின் பேரலைகள் பாண்டிய தேசத்தை கொடூர வேகத்தோடு நிர்மூலமாக்க வரும் தகவலை வள்ளுவன் முரசறைந்து பகிரங்கப் படுத்தினான். எண்பேராயமும் ஐம்பெரும் குழுவும் நகரெங்கும் குடிகளை ஒருங்கு குவித்து அணை கோலிகளை உடனடியாக அனுப்பி வைக்குமாறு நிர்ப்பந் தித்தனர். வல்லமையின் நீட்சியாக ஆறு அகலித்திருந்தது. பெரு நிலங்களைச் சங்காரஞ் செய்த கர்வத்தோடு கதைமீறத் துடித்தது. ஆற்றங்கரையே நாகரீகத்தின் தொட்டில் சலசலப்புக்கு கிறங்கிப் போதல் மனித குலத்தின் குருதிக் கலங்களில் உறைந்து கிடக்கிறது. நுரைகழல் புனைந்த வைகை ஊழிக்கூத்தின் ஒத்திகையாக ஆர்ப்பரித்தது. எல்லை தாண்டி மண்ணை விழுங்கி செரிக் கும் சீற்றத்தோடு கொக்கரித்தது. வைகையின் பிறப்பு நீலம் விரவிய நெடுமாலின் தடக்கை ஸ்பரிசத்தால் நிகழ்ந்ததாகும். நெடுமால் நீரோடான வாழ்வுடன் அத்வைதமானவர். அரிமர்த்தன பாண்டியனும் நீர்மை படந்த நெய்தலின் கரையில் பிறந்து கொடுந் திரைகளை எதிர்க்கும் குணாம்சத்தால் கொற்றவனானவன் தான். மூர்க்கமாகக் க்ரை தொட்ட கிளை யாறுகளை அணையிட்டுத் தடுத்த அசகாயசூரன்! எனினும் திருவாதவூரன் பக்தி நெறியுள் பதுங்கிய தருணத்திலிருந்து அரிமர்த்தன பாண்டியன் அபத்தச் சூழியில் சிக்கிக் கொண்டான். புரவிக் கொள் வனவு நிமித்தம் அயல்நாடு பயணித்த திருவாதவூரன் ஊழல் புரிந்ததாக ராஜதுரோகக் குற்றம் சுமத்தப் பட்டான். அதிகாரத்தின் கபாலம் அதிர்வுக்குள்ளாக்கியது. மீன் கொடியில் கருவாட்டின் வெடில் வீசியது. விஷமப் புன்னகை சூடிய பரிமேலழுகர் திருவாதவூரனுக்கு சரணாகதி வழங்கினார்.

“உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சொற்புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கென்றுரைப் போம்கேள்
எங்கொங்கை நின்னன் பரல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கெல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோ ரொம்பாவாய்”

என்று மறுபாலருக்கும் சேர்த்தே திருவாசகத்தை திருவாதவூரன் ஓதத் தொடங்கினான். பக்தி அபசாரமாகிப் பிசிறடித்த போதும் வைராக்கியத்தோடு ஞானத்தேடலில் இறங்கினான். வெப்பத்தின் வாத்சல்யத்தை மூர்க்கமாக எதிர்த்து ஆற்றுப் பெருக்கினை அவாவினான்.

பரமன் செம்மனச் செல்வியின் குடிலின் முன்னே நின்றான். செம்மனச் செல்வி துணையிலி. அரச பணியாற்ற அங்கத்தவரற்றோர் கூலி கொடுத்தேனும் கொற்றாள் ஒருவனை அனுப்பி வைத்தாக வேண்டும். பாண்டியனுக்கோ தெரியாமல் சேவகர்கள் செயற்படுத்தும் ஆணை யென மதுரை வாசிகளில் சிலர் பேசிக் கொண்டனர். எனினும் மக்களுக்கு இந்தக் கருதுகோளை வாய்ப்புப் பார்க்கும் தருணம் வந்தமையவே இல்லை. பிறைசூடிய பெருமானிடம் நிகழ்த்திய பிரார்த்தனையின் பலனாகவே பரம் கூலியாளாக வந்ததாக செம்மனச் செல்வி நம்பினாள். மதுரைக் குடிகள் மீட்பரான அரிமர்த்தன பாண்டி யனை சாத்தானாகவும் கருதிக் கலங்கி மன முடக்கத்துக்கு உள்ளாகினர். அணைகோலிகளாகப் பிள்ளைகளை அனுப்ப மறுத்த இல்லங்களில் வினோத வியூகங்களில் கலந்து வைத்தனர். எனினும் மதுரை மாநகர்ச் சேவகர்களின் பட்டறிவு நுட்பத்தால் பதுங்கியிருந்தோர் இனங் காணப்பட்டு மண் சுமக்க அனுப்பப்பட்டார். பரமன் முழு ஈடுபாடின்றி ஊழியம் நிகழ்த்தியதால் முதுகில் வடுவேற்றவன்.

கங்குல் கவசமணிந்து திரண்டது. ஒளியை இறுக்கிக் கட்டிப் போடக் காலம் எத்தனித்தது. மண் சுமந்த பரிசுகள் மிரண்டு பாகர்கள் வெகுள ஏதேதோ நிகழ்வுகள் அரங்கேறின. புரவிகள் ஊளையிடத் தொடங்கின. நரிகள் பிரிசுகளைக் கடித்துக் குதறியதோடு, எஞ்சியவற்றுக்கு ஊளையோசை கற்றுக் கொடுத்தன.

கிளைபிரிந்த வைகையாறு அனைத்து மருங்கிலும் ஆவேசமாகத் தாக்கியது. அணைகளில் விரிசல் விழுந்தது. நீரின் பிரவாகம் மூர்க்க மடைந்தது. காட்டாறு பாயந்தது. நீரின் நாக்குகள் உயிரிகளைத் தின்று தீர்த்தன. நுரைகள் உடைமைகளை அள்ளிச்சென்றன. சலசலத்த சலங்கை நர்த்தனங்களுக்கு மரணக் கரகோஷங்களே வேட்கையாக இருந்தன. மதுரை வாசிகள் தலைதெறிக்க ஓடினர். தண்மை வியூகம் அமைத்து வியாபித்தது. சதை, எலும்பு, குருதி என்பன பிசைந்து குயவன் செய்த பாத்திரங் கள் தற்காப்பு நாடித் தவித்தன. மந்திர உச்சாடனங்கள் பலனளிக்கவில்லை. அற்புதங்கள் கலாவதியாகியதால் கடவுளரும் மௌனித்தனர். எண்ணற்ற பிரதேசங்கள் நீரில் மூழ்கின. கழுத்து நஞ்சு மறைத்து. வரியாடை நீக்கிய பரமன் குறிக்கோளற்று வேகமாக நடக்கத்தொடங் கினான்.

***

இரும்புப் பூண் புனைந்த தந்தங் களுடைய களிறுகள் ஆற்றங்கரையில் மெதுவாக நடந்து சென்றன. வைகைக் கரையில் கம்பீரமாக் காட்சிகொடுத்த சிலை கவந்தமாக நின்றது. தலைபோன இடம் புரிதலுள் அடங்கவில்லை. தலை பற்றிய புனைவுகள் புற்றீசலாக வெளிக் கிளம் பின. கவந்தத்தோடு எந்தக் காலத்திலும் எந்தத் துண்டமும் பொருந்தப் போவதில்லை என்பது மட்டும் புரிந்தது. கவந்தத்தை நோக்கிச் சிலர் உருண்டையான பாறாங்கற்களை நகர்த்த எத்தனித்தனர். அவர்களுள் பரமனும் ஒருவன். கழுத்தில் நஞ்சோ, கையில் சூலமோ, அடையில் வரிகளோ அவனிட மில்லை. புதிய வருவாய்களால் மேனியெங்கும் ஆபரணங் கள் ஆக்கிரமித்திருந்தன.

ஆழ்கடல் இருண்மையுள் ஏராளமான எலும்புக் கூடுகள் புதைந்துள்ளதான ஆமைகளின் குற்றச்சாட்டுக்கள் அர்த்த மிழந்திருந்தன. புணரியின் ஆழ்புலத்தில் பொதிந்திருக்கும் எலும்புகளின் எச்சம் குறித்த பிரக்ஞையின்றி திருவாதவூரன் திருப்பதிகங்களைப் பாடிக்கொண்டிருக்கிறான். ஊடக வாழிகளின் அறிக்கையினை நீர்வாழ் உயிரிகள் நிராகரித்தன. குறிசொல்லிகள் சூழியோடியின் வருகை பற்றிய ஆரூடத்தை மீட்டெடுப்புச் செய்தனர். அர்த்தமிழந்த கவிதை ஏடொன்று கவனிப்பாரற்று தெருவிலே குப்புறக் கிடக்கிறது. இலக்க ணத் திருத்தம் கவிதை ஏட்டின் மீது கவனக் குவிப்பினை ஏற்படுத்துமென்று மதில் மேற்பூனைகள் முணுமுணுக்குக் கின்றன. தயங்கித் தயங்கி கிளை யொன்றை வளைத்த பூசாரி மொட்டின் நறுமணம் நுகர்ந்த பின் தலை மறை வானான். ஈச்சம் புதரில் பதுங்கிய சாரையொன்று தவளையின் நடமாட்டத்தை இனம்கண்டு சோம்பல் முறித்தது.

***

பிச்சாடனன் ஒருவன் திருவோடு ஏந்தியவாறு பேருந்தில் பயணிக்க “பிட் டுக்கு மண்சுமந்த பெருமானார் ” என்ற பாடல் ஒலிக்கிறது. “இப்போதும் எமக்காகா எழுவாயய்யா” என்ற ஆன்மீகம் கடந்த அழைப்பு காற்றிலே கலந்து கரைந்தது. “தாய் எழுந்து இருக்கின்றாள். அருகி னி லே ஏன் சா வருகின்றதையா தெருவி னிலே” என்ற கடவுள் மறுப்பு வரி பிச்சா டனனை திடுக்கிட வைத்தது. திடீரென்று பேருந்து நிறுத்தப்பட்டது. பௌணர்மி நாளில் தினுசு தினுசாக அழகிய வெண் கூடுகள் மின்குமிழ்களால் அலங்காரிக் கப்பட்டிருக்க … பிச்சாடனன் யாசிக்கா மலேயே “கிரிபத்தும்” “மஸ் கற்றும்” திருவேட்டினை நிரப்பின. அந்தத் திருவோட்டின் விளிம்பில் என்றோ விழுந்த பிட்டின் துகளொன்று ஒட்டியிருப்பது போன்ற பிரமை தோன்றியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்கிலிருந்து குருதி வழிகிறதா?

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

**என்ரை பிரசரை ஒருக்கால் பாருங்கோ**

கைக்குட்டையால் மூக்கை ஒரு கையால் பிடித்தவர் மற்றதை கைலாகு கொடுப்பது போல முன்னே நீட்டியபடி அந்தரப்பட்டு ஓடி வந்தார்.

முதலிலை பதற்றப்படாமல் உட்காருங்கோ. என்ன பிரச்சினை? என வினவினேன்.

பிரசர் தலையிலை அடிச்சுப்போட்டுதோ தெரியவில்லை என்றார். அவரது கைக்குட்டை நனைந்து கிடந்தது என் கவனத்தை ஈர்த்தது. ஆனால் அதில் சளி இருந்ததே ஒழிய இரத்தக் கறை இருப்பதாகத் தெரியவில்லை


மூக்காலை இரத்தம் சளியோடை வருகுதோ அல்லது தனி இரத்தமா ஓடுதோ? என விபரம் கேட்டேன். சீறச் சீறச் சளியோடுதான் வருகுது என்றார்.

மூக்குச் சளியோடு இரத்தம் கலந்து வருவது பெரும்பாலும் கிருமித் தொற்றால் ஏற்படுவதாகும். மூக்கின் அருகில் இருக்கும் காற்றறைகளில் தொற்று ஏற்படுவதே இதற்குக் காரணமாயிருக்கும். இது தனி இரத்தமாக இருக்காது சளியுடன் சேர்ந்து சற்று வரும்.

**காற்றறைகள்**

ஆனால் சளிப் பிரச் சினை இன்றியும் சில நேரங்களில் மூக்கிலிருந்து இரத்தம் அதிகளவில் சிந்துவதுண்டு. இதுவே பலரையும் கிலிகொள்ளச் செய்வதாக இருக்கிறது. இரத்தம் வருவது ஒரு மூக்கிலிருந்தாக இருக்கலாம். அல்லது இரண்டிலிருந்தும் வரக் கூடும். ஒரு சில செக்கன்கள் முதல் பல நிமிடங்கள் வரை மூக்கிலிருந்து குருதி வருதல் தொடரக் கூடும்.

பொதுவாகக் குழந்தை களிலேயே இதனை அதிகம் காணக் கூடியதாக இருந் தாலும் பெரியவர்களிலும் காண முடிகிறது.



பல வயதானவர்களுக்கு மூக்கால் வடியும் இரத்தம் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் தினசரி உட்கொள்ளும் மருந்தாக இருக்கலாம். நீரிழிவு, பிரஸர், கொலஸ் ரோல், இருதய நோய்கள் போன்றவை முதியவர்களிடம் அதிகமாக இப்பொழுது காணப்படுகின்றன.

இதனால் மாரடைப்பு பக்கவாதம் போன்ற பிரச்சினைகள் அவர்களுக்கு வருவதைத் தடுப்பதற்காக குருதி உறையும் வேகத்தைத் தணிக்கும் அஸ்பிரின், குளொபிடோகிறில், வோர்பரின் போன்ற மருந்துகளில் எதையாவது அவர்கள் தினசரி உட்கொள்கிறார்கள். இதனால் மூக்கால் இரத்தம் வடிய நேர்ந்தால் அது உறையாது நீண்ட நேரம் தொடரலாம்.

**புகைத்தல் பழக்கமானது நாசியை வரட்சி அடையச் செய்து இரத்தம் வடிவதைத் தூண்டக் கூடும் என்பதால் புகைத்தலைத் தவிருங்கள்.**

**என்ன செய்ய வேண்டும்?**

மூக்கால் இரத்தம் வடிந்தால் பதற்றப்படாதீர் கள். மூக்கைச் சீறிச் சிந்தாதீர்கள். தண்ணீர் அடித் துக் கழுவாதீர்கள். மூக்கைக் குடையாதீர்கள். இவை இரத்தம் வடிவதைத் தடுப்பதற்குப் பதிலாக நிலைமையை மோசமாக்கும்.

நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். மூக்கை அழுத்திப் பிடிக்க வேண்டும். நாசித் துவா ரத்துக்கும் மூக்கு.எலும்பு இருக்கும் இடத்துக்கும் இடைப்பட்ட பகுதியை அழுத்திப் பிடியுங்கள்.

விட்டு விட்டுப் பார்க்காது தொடர்ச்சியாக 10 நிமிடங்களுக்கு அவ்வாறு அழுத்திப் பிடித்திருப்பது அவசியம்.

மூக்கால் குருதி வடியும்போது, படுக்கக் கூடாது. நிமிர்ந்து உட்காருங்கள். முற்புறமாக முகத்தைச் சரித்துப் பிடித்தபடி, வாயால் சுவாசித்துக் கொண்டு மூக்கை அழுத்திப் பிடியுங்கள். தொண்டைக்குள் இரத்தம் வடிந்து மூச்சுத் திணறடிப்பதை தடுப்பதற்காகவே முற்பக்கமாக சரிந்திருப்பது அவசியமாகும்.

தற்செயலாக வாய்க்குள் இரத்தம் வந்துவிட்டால் அதைத் துப்புங்கள். இல்லையேல் வாந்தியும் சேர்ந்து வரக் கூடும்.

மூக்கால் இரத்தம் வடிவது நின்ற பின்னரும் 24 மணி நேரத்துக்கு அவதானமாக இருங்கள். மூக்கைக் குடையாதீர்கள், தும்மாதீர்கள், மூக்கைச் சீறாதீர்கள். மூக்கினுள் இரத்தம் உறைந்து கட்டியாக இருந்தாலும் அதை அகற்ற முனையாதீர்கள். இவை மீண்டும் இரத்தம் வடிவதைத் தூண்டக் கூடும்.

**எவ்வாறு ஏற்படுகிறது?**

மூக்கின் உட்பகுதி இரத்த ஓட்டம் மிகுந்தது ஆகும். நுண்ணிய குருதிக் குழாய்கள் நிறைந்திருக்கின் றன. மூக்கைக் கிண்டுவது, துழாவுவது, மூக்குச் சீறுவது போன்றவற்றால் ஏற்படும் சிறிய காயங்கள் மூக்கிலிருந்து குருதியைச் சிந்தவைப்பதற்குப் போதுமானதாகும்.

மூக்கின் உட்பகுதியானது எப்பொழுதும் ஈரலிப் பாகவே இருக்கும். ஆனால் அது காய்ந்து வரண்டு சொரசொரப்பாக இருந்தால் சிறிய காயங்கள் ஏற் பட்டாலும் இரத்தம் வருவதற்கான வாய்ப்பு அதிக மாகும். முக்கியமாக தடிமன், சளி போன்ற கிருமித் தொற்று களின் போது நிகழலாம். கடுமையான குளிரின் போதும் இது நிகழலாம்.

**காரணங்கள்**

மூக்கைக் குடைவது -முக்கிய மாக நகமுள்ள விரல்களால் குடைவது- கடுமையாகச் சீறுவது போன்றவை பற்றி ஏற்கனவே சொன்னோம்.

மூக்கு வளைந்திருப்பது மற்றொரு காரண மாகும். சிலருக்கு இயற்கையாகப் பிறப்பிலும் வேறு சிலருக்கு அடிபட்ட காயங்களாலும் மூக்கின் உள்ளெலும்பு வளைந்திருப்பதால் சிறுகாயங்கள் ஏற்படுவதற்கும் இரத்தம் வடிவதற்குமான சாத்தியம் அதிகமாகும்.

தடிமன், மூக்கடைப்பு, சைனசைடிஸ் போன்ற நோய்களும் காரணமாகலாம்.

தூசி, மகரந்தம் போன்றவற்றுக்கு ஒவ்வாமை உள்ளவர்களுக்கும் வரலாம். உயர்ந்த மலை போன்ற உயரமான இடங்களுக்குச் செல்லும்போது வளி அழுத்த வேறுபாடுகளாலும் ஏற்படுவதுண்டு.

மூக்கடைப்பைத் தடுப்பதற்கு கொடுக்கப்படும் சில மருந்துகளை மருத்துவ ஆலோசனை இன்றி தொடர்ந்து உபயோகிப்பதாலும் ஏற்படலாம்.

குருதி உறைதல் குறைபாட்டு நோய்கள், ஈரல் சிதைவு நோய்கள் குருதிப் புற்று நோய் போன்ற காரணங்களாலும் சில தருணங்களில் மூக்கால் இரத்தம் வடியக் கூடும்.

சாதாரணமாக இரத்தம் வடிதல் மூக்கின்

**பல வயதானவர்களுக்கு மூக்கால் வடியும் இரத்தம் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் தினசரி உட்கொள்ளும் மருந்தாக இருக்கலாம்.**

முற்புறம் இருந்தே வருகிறது. ஆயினும் மூளையை நெருங்கி இருக்கும் மூக்கின் பிற்புறம் இருந்தும் இரத்தம் வடியக் கூடும். இது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. முக்கியமாக வயதானவர்களில் ஏற்படும். மூக்கில் அண்மையில் செய்யப்பட்ட சத்திரசிகிச்சை, கொலஸ்டரோல் பிரச்சினை போன்றவற்றில் இரத்தக் குழாய்கள் தடிப்படைதல், மிகக் கடுமையான உயர் இரத்த அழுத்தம், கட்டிகள் வளர்தல், போன்றவை காரணமாகலாம்.

**சிகிச்சை**

பெரும்பாலும் சிகிச்சை எதுவும் தேவைப்படாது. தானாகவே நின்றுவிடும்.

தானாக நிற்காவிட்டால் ஆரம்பத்தில் சொன்ன முதலுதவி முறைகளைக் கடைப்பிடியுங்கள்.

ஐஸ் பக் வைப்பதும் உதவலாம்.

இருதயப் போக்கு மிகக் கடுமையாக இருந்தால் அல்லது முதலுதவி சிகிச்சைகளை செய்தபோதும் 20 - 30 நிமிடங்களுக்குள் மூக்கிலிருந்து இரத்தம் வடிவது நிற்காவிட்டால் மருத்துவரைக் காணுங்கள். இரத்தப் போக்கால் உடல் வெளிறுவது, இருதயத் துடிப்பு வேகமாவது, மூச்செடுப்பதில் சிரமம் ஏற்படுவது போன்ற அறிகுறிகள் தோன்றினால் தாமதிக்காது மருத்துவரை அணுகவேண்டும்.

நோயின் தாக்கத்துக்கும் காரணத்துக்கும் ஏற்ப பலவித சிகிச்சை முறைகளை மருத்துவர்கள் கையாளக் கூடும்.குருதி பெருகும் இடத்தை தெளிவாகக் கண்டு பிடித்தால் இந்த இடத்தை சில்வர் நைரேட் போன்ற இரசாயனங்களால் அல்லது மின்கோலால் சுட்டு அடைக்கக் கூடும்.

இருந்தபோதும் மூக்கின் புறமிருந்து ஏற்படும் இரத்தம் வடிதலுக்கு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை செய்ய நேரிடும்.

மருந்துகள் காரணமாயிருந்தால் மருத்துவர்கள் அவற்றின் பாவனையை மறுபரிசீலனை செய்வார்கள். முன்கூறிய அஸ்பிரின் குளொபிடகிறில் மட்டுமின்றி பெரும்பாலான வலிநிவாரணி மருந்துகளும் குருதிப்பெருக்கை தீவிரப்படுத்தக் கூடும். எனவே அவற்றை மருத்துவ ஆலோசனை இன்றிப் பயன்படுத்த வேண்டாம். இருந்தாலும் பரசிட்டமோல் மருந்து பாதுகாப்பானது.

புகைத்தல் பழக்கமானது நாசியை வரட்சி அடையச் செய்து இரத்தம் வடிவதைத் தூண்டக் கூடும் என்பதால் புகைத்தலைத் தவிருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமியும் கலக்ஸியும்

**அத்தியாயம் - 22**

## அறிவியல் தொடர் கதை

(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)

படலை ஜே.கே

கந்தசாமியின் மூளையை அடிக்கடி ஸ்கான் பண்ணி விதம் விதமான பரிசோதனைகள் செய்தார்கள். கந்தசாமிக்கு தன்னுடைய மூளைக்குள் இத்தனை விஷயங்கள் இருக்கிறதா என்று ஆய்வுகூட இராட்சத திரையை பார்த்தபோது ஆச்சரியம் ஆச்சரியமாக வந்தது. பூமியில் எத்தனை மண்டைக்காய்கள் இருந்தாலும் கடைசியில் தான் தானே அத்தனை பேரிலும் முக்கியமானவன் என்ற எண்ணம் கொஞ்சம் பெருமையையும் வரவைத்தது.

"கந்தசாமி.. நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.. குளித்து தயாராகவும்.. மறக்காமல் துவாயை எடுத்து வைத்துக்கொள்ளவும்"

எங்கிருந்தோ அறிவிப்பு வந்தது. தூக்கம் வராமல் சிந்தனையில் உழன்றுகொண்டிருந்த கந்தசாமி கட்டிலில் மீண்டும் புரண்டு படுத்தார். இன்றைக்கு இறுதி நாள். தயாராகவேண்டும். தயாராகுவதென்றால் எப்படி? கந்தசாமிக்கு எதை எதை எடுத்து வைப்பது என்று புரியவில்லை. துவாய் மட்டும் போதுமா? பேஸ்ட் பிரஷ் வேண்டாமா? பூமி அழிவதற்கு முன்னால சுமந்திரன் கச்சான் வாங்கப்போனது ஞாபகம் வந்தது. பார்க்க லூசுத்தனமாக இருக்கின்ற சுமந்திரன் பிரபஞ்சமே வியக்கும் விஞ்ஞானி என்பதை நம்பமுடியவில்லை.

"எந்தப் பற்றைக்குள்ள எந்தப் பாம்பு இருக்குமோ?"

"கந்தசாமி யோசிச்சுக்கொண்டிருக்கும்போதே அறை முழுதும் பீப் பீப் என்று சைரன் அடித்தது. கிழிஞ்சுது. இனி நான் எந்தக் கேள்வி யோசித்தேன் என்று ஸ்கான் பண்ணி ஆராயப்போறாங்கள், அறுவாங்கள். கொஞ்ச நாளாக வித்தியாசமான எந்தக் கேள்வி மனதில் எழுந்தாலும் அது தான் அந்தக் கேள்வியோ என்று தடைந்து எடுத்துவிடுவார்கள். இப்பிடித்தான் அன்றைக்கு பாத்ரூமில் நதி எங்கே போகிறது? கடலைத் தேடி என்று ஹம் பண்ணிக்கொண்டிருக்க திடீரென்று சைரன் அடித்தது. அட கருமமே என்று ரென்ஷனில் துவட்டியும் துவட்டாமலும் துவாயை எடுத்து கட்ட முதலேயே சக்கையின் ரீம் பாத்ரூமுக்குள் உபகரணங்களுடன் இறங்கி விட்டது.

"கமோன் கந்தசாமி அடுத்தது என்ன..?"

"என்ன அடுத்தது?"

"அதான் இப்ப ஒரு கேள்வி கேட்டு பதிலும் சொன்னாயே .. அப்பிடியே கொண்டினியூ பண்ணு"

"ஓ அதா .. நதி எங்கே போகிறது? கடலைத் தேடி"

கந்தசாமி மீண்டும் செருமிக் கொண்டு பாடினார். பாத்ரூமில் தனியே பாடிய போது நன்றாக இருந்தது போலத் தோன்றியது.

"குட் நெக்ஸ்ட் ..?"

"நாள் எங்கே போகிறது? இரவைத் தேடி"

"ஷிட் .. இதில்ல. அடுத்த வரி குவிக்"

"நிலவெங்கே போகிறது? மலரைத் தேடி"

"நிப்பாட்டாம தொடர்ந்து சொல்லு"

"அடுத்த கேள்வி .. அடுத்த ப்ச் டக்கென்று வருதில்ல"

"ஒல் மோஸ்ட் .. இதான் கட்டம்.. வந்திட்டுது .. சொல்லு அடுத்த கேள்வி என்ன .. யோசி .."

"அதுக்கு மேலே கேள்வி இல்லை சக்கை"

"என்ன சொல்ற கந்தசாமி.. செக்ஷன் 285 .. உடனடியா எலிதாசன்325 ஐ கூப்பிடு."

சுமந்திரனும் அவருடைய ரீமும் உடனடியாகவே இண்டர்கொம்மில் வந்தார்கள்.

"வட்?"

"என்ன?"

"மொகத?"

"கியா?"

"சாக்தே?"

என்று ஆளாளுக்கு



கேட்டார்கள். அதே கேள்விகளைத் திரும்பத் திரும்ப சொல்லச்சொல்லி சிமுலேட் பண்ணினார்கள்.

"எல்லாமே ந எழுத்தில் ஆரம்பிக்கிறது." "சோ அடுத்த கேள்வியில் நவில் தான்." "என்ன கேள்வி அது?"

"நாய் எங்கே போகிறது?. நோ, இட் ஷுட் பி நி" என்றார் சுமந்திரன்.

"நித்யா எங்கே போகிறது? நோ, ஷுட் பி அஃறிணை.. நி.. நி.. நீ ..நிலை .. நினை.. எஸ் நினைவு .. நினைவு எங்கே போகிறது? தட்ஸ் தி குவஷ்யன். இந்த வாழ்க்கை, பிரபஞ்சம் எல்லாத்துக்குமான ஒரே கேள்வி .. தின்னவேலிக்கான பதில் .. நினைவெங்கே போகிறது?."

"உறவைத்தேடி"

"வட்?"

"நினைவெங்கே போகிறது.. உறவைத்தேடி .. இப்ப நல்லா ஞாபகம் வந்திட்டுது.. கண்ணதாசன் எழுதினது."

"வடிவாத் தெரியுமா யோசிச்சு சொல்லு கந்தசாமி"

"அம்மாவாணைத் தெரியும் .. கலியாணம் ஆன புதுசில செல்வராணியைப் பார்த்து இந்தப் பாட்டுத் தான் பாடினனான் .. பிறகு பிறகு பாடாம விட்டதால மறந்து போனன்"

சுமந்திரன் தலையில் கைவைத்தார்.

"ப்ச் .. தென் இட்ஸ் நொட் தின்னவேலி"

"ஓம் செல்வராணி தின்னவேலி இல்ல .. அவள் வந்து.. துலைக்கால.."

"ஷட் அப் கந்தசாமி .. ஹேய்.. சக்கை .. இது தவறான சிக்னல் .. குளோசா மொனிட்டர் பண்ணுங்க .. இந்த மூளை கொஞ்சம் வேர்க் பண்ணினா பிடிச்சிடலாம்.. பட் .. பண்ணுமா" எண்டு தெரியேல்ல..

கந்தசாமி இதைக் கவனிக்காமல் காது குடைந்துகொண்டிருந்தார்.

"ஒரு ஐடியா. நொன் டிட்டேர்மினிஸ்ட்டிக் பியூட்சரிஸ்ட்டிக் பொலினோமியல் சேர்ச் ஒண்டு செய்து பாக்கலாமா? இந்த கேள்வி வரிசை போய்க்கொண்டே இருந்தா ஒரு கட்டத்தில தின்னவேலி வரலாம் இல்லையா?"

"சான்ஸ் இல்ல .. கடந்த காலத்தை வைத்துக்கொண்டு எதிர்காலத்தை துணிவதற்கு ரிகிரியேஷன் சிமியுலேஷன் இல்லாமல் செய்யமுடியாது.. அதால தானே பூமியையே உருவாக்கவேண்டி வந்தது"

அந்த பாத்ரூமே இப்போது ஒரு சின்ன ஆய்வுகூடமாக மாறியிருந்தது. கந்தசாமியின் தலை பூராக வயர்கள் குறுக்கும் நெடுக்குமாக ஒட்டப்பட்டிருந்தன. கந்தசாமிக்கு நடப்பவை எல்லாமே லூசுத்தனமாக இருந்தன. அட அந்நாள் ஒரு பீலிங்கில சினிமா பாட்டை எழுதீட்டு போனா, அதை வச்சு பிச்சு புடுங்கிறாங்களே .. இவங்கள் எல்லாம் அந்தக் கேள்வியை கண்டு பிடிச்ச மாதிரி தான் என்று நினைத்துக்கொண்டார்.

"அப்பிடி எண்டால் இந்த மண்டைக்க இருக்கிறத வச்சுக்கொண்டு அந்தக் கேள்வியை கண்டுபிடிக்க முடியாதா?"

"ம்ஹூம்"

"சோ என்ன செய்யலாம்? திருப்பி ஆரம்பத்தில இருந்து வரோணுமா?."

"தேவையில்லை .. கந்தசாமியின் மூளையில இருக்கிற தகவல்களை வச்சுக்கொண்டு ஒரு நில்லயாண தளத்தை கண்டு பிடிக்கொண்டும் .. யூ நோ .. அந்த பிராஞ்ச் பொயிண்ட்.."

"ம்ம்ம் .. அந்த பொய்ண்டுக்கு போய் திரும்பி ப்ரோகிராமை இடையில இருந்து ரன் பண்ணோணுமா?"

"கரக்ட் நான் பூமில இருக்கேக்க.. ஷ்ரோடிங்கர் என்கிற ஒரு மனித ப்ரோகிராம் இந்தத் தத்துவத்தை சரியா கண்டுபிடிச்சது .. ஆனா தின்னவேலிக்கு வெகு துலைவில ஒஸ்டிரியா எண்ட இடத்தில இருந்ததால அந்த ப்ரோகிராமை சரியா யூஸ் பண்ண முடியேல்ல.."

பூமியில் இருந்த மனிதர்களை வெறும் ப்ரோகிராம்களாக அழைத்து இவர்கள் பேசிக்கொள்வதைப் பார்க்க கந்தசாமிக்கு கோபம் கோபமாக வந்தது. ஆனால் ஏதாவது கோடிங்கை இவர்கள் மாற்றிவிட்டால் தனக்கும் மெண்டலாக்கிவிடுமோ என்ற பயத்தில் எதற்கும் ரியாக்ட் பண்ணாமலேயே இருந்தார்.

(கலக்குவார் கந்தசாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம்..! பணம்.!! பணம்..!!!



வீரர்களைப் பணயம் வைத்து பணம் சம்பாதிக்கும் உத்தியை இலங்கை கிரிக்கெட் சபையும் கையாண்டுள்ளமை இலங்கை வீரர்கள் மத்தியில் மட்டுமன்றி கிரிக்கெட் விமர் சகர்கள் மத்தியிலும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பளப் பிரச்சினை காரணமாக இந்தியாவுடனான தொடரை பாதியிலேயே நிறுத்திவிட்டு அவசர அவசரமாக நாடுதிரும்பியது மேற்கிந்திய தீவுகள் அணி. இதனால் பெருந்தொகை பணத்தை செலவு செய்து தொடரை நடத்துவதற்காக ஏற்பாடுகளை செய்திருந்த இந்திய கிரிக்கெட் சபைக்குப் பெருமளவில் நஷ்டம் ஏற்பட்டிருந்தது.

எனவே குறித்த தொடரை வேறு அணியுடன் நடத்தி பணத்தை பெற்றுவிடலாம் என்று எண்ணி அயல்நாடான இலங்கையை இந்தியக் கிரிக்கெட் சபை நாடியது.இது குறித்து இலங்கை வீரர்களிடம் அனுமதி கோராமல் தலையாட்டி பொம்மை போல எடுத்த எடுப்பில் இலங்கைக் கிரிக்கெட் சபையும் சம்மதித்திருந்தது. இது வீரர்களிடையே பெரும் அதிருப்தியை உண்டாக்கிவிட்டது.

பொதுவாக இலங்கையணி இந்தியாவுடனான தொடரில் பங்குபற்றும் போது பெருமளவான பணம் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு கிடைப்பது வழமை. ஆனால் இந்தியாவின் இந்த அவசர. அழைப்பை ஏற்றுக் கொண்டமை வீரர்களின் நலனைக் கருதாமல் பணத்தை மட்டும் குறிக்கோளாக கொண்டு இலங்கை கிரிக்கெட் சபைச் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தன்னிச்சையாக எடுத்த முடிவென்றே சொல்லப்படுகின்றது.

தற்போது இலங்கை வீரர்களுக்கு உடல் தகுதி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வீரர்கள் போதியளவு பயிற்சி இல்லாமல் உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா வுக்குத் திடீரெனச் செல்வதால் உடற்தகுதி பாதிக்கப்படுவது டன், இந்தியாவுடனான போட்டிகளிலும் இலங்கை சாதிக்க முடியாமல் போய்விடும்.

அது மட்டுமன்றி இங்கி லாந்துடனான தொடருக்கு தயா ராகி வரும் காலத்தில் இந்தி யாவுடன் மோதுவதால் இரு நாட்டு கிரிக்கெட் ரசிகர்களும் பெரிதும் எதிர்பார்த்து நிற்கும் இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரும் சோபையிழந்து போகலாம்.

# படுக்கைக்கு வந்தாலே வாய்ப்பு

இலங்கை மகளிர் கிரிக் கெட் அணியில் இணைந்து கொள்ள விரும்பும் வீராங்கனை களிடமும், அணியில் இடத்தை தக்கவைத்துக்கொள்ள விரும் பும் வீராங்கனைகளிடமும் தம்முடன் படுக்கையை பகிர



வேண்டும் (பாலியல் லஞ்சம்) எனக் தேர்வாளர்கள் கோரியுள் ளமை பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு பாலியல் லஞ்சமாக இந்திய திரைப்படங் களில் கதாநாயகிகளாக நடிக்க வரும் வறுமையான குடும் பத்தை சேர்ந்த புதுமுக நாயகிகளிடம் ஒரு சில இயக்குநர்கள், முகவர்கள் அவ்வப்போது பெறத்தான் செய்கின்றனர்.

ஆனால் இலங்கை கிரிக்கெட் தேர்வாளர்கள் பாலியல் லஞ் சம் கோரியதாக உள்ளூர் ஊட கம் வெளியிட்ட செய்தியானது இலங்கை கிரிக்கெட் சபையை பெரும் சிக்கலில் மாட்டிவிட்டுள் ளது. இருந்த போதிலும் படுக்கையை பரிமாறிக்கொள்ள வருமாறு தம்மை அழைத்ததாக எந்தவொரு வீராங்கனையும் இதுவரை நேரடியாக முறையிடவில்லை.

ஆனாலும் ஊடகத்தின் செய்தியால் சிக்கலில் மாட்டி யுள்ள கிரிக்கெட் சபை அவசர அவசரமாகக் கூடி 3 உறுப்பினர் களை கொண்ட குழுவை அமைத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்த விசார ணைக்குழுவில் இடம்பிடித் துள்ள மூவரும் ஆண்கள் என்பதனால் விசாரணைகள் எந்தளவுக்கு நீதி நியாயமாக இடம் பெறுமென்பதுதான் கேள்விக்குறி.



# வேண்டாத ஆசை

உலகில் அதிகமானவர் களை தன்வசம் ஈர்த்துள்ள விளையாட்டுவீரர்கள் பல்வேறு சர்ச்சைகளில் சிக்குவது வெகுசாதாரணமாகி விட்டது.

மலேசியாவைச் சேர்ந்த உலகின் முதல்தர பட்மின்ரன் வீரர், லீ சாங் வெய்யும் (வயது 31) தானும் இதற்கு விதிவிலக்கானவன் அல்ல என்பது போல ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு முன்பு அவரது தொடையில் காயம் ஏற்பட்ட போது 5 - 6 வாரங்கள் ஓய்வு எடுக்க வேண்டுமென வைத்தியர்கள் அறிவுரை வழங்கியிருந்தனர். அது மட்டுமல்லாது 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் முழுக்கவனம் செலுத்த ஏதுவாக பிற போட்டிகளை குறைக்கும்படியும், உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் போட்டிகளைத் தவிர்க்குமாறும் மலேசிய விளையாட்டுத்துறை அதிகாரிகள் அவரைக் கேட்டிருந்தனர்.

ஆனால் அந்த அறிவுரைகளைப் பொருட்படுத்தாது ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி டென்மார்க் கோபன்ஹேகனில் நடைபெற்ற உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்து கொண்டார் லீ சாங். காயத்தால் அவதிப்பட்டவர் எவ்வாறு இப்படி விளையாட முடியுமென்ற கேள்வி எழவே, இவர் மீது ஊக்கமருந்துச் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தினை லீ சாங் பயன்படுத்தியத்தியமை அம்பலமாகியுள்ளது.

வேண்டாத ஆசை விபரீதமானது போன்று 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் விளையாடும் வாய்ப்பு கை நழுவிப்போக வாய்ப்புகள் அதிகவே உள்ளது. ஆனால் லீ சாங் மீது சுமத்தப்பட்ட குற்றம் இன்னும் நிரூபிக்கப்படாததால், அடுத்தகட்ட சோதனை நடந்து கொண்டிருக்கிறது. அதில் குற்றமற்றவர் என்று நிரூபணமானால் மட்டுமே லீசாங் ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியும்.

# வியாபாரக் கிரிக்கெட்

உலகில் மூன்றில் ஒரு பகுதி ரசிகர்களை தன்பக்கம் ஈர்த்துள்ள கிரிக்கெட்டின் உலகக்கிண்ணத் திருவிழா அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 29 ஆம் திகதி வரையில் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

பொதுவாக உலகக்கிண்ண தொடர் இடம்பெறுகின்ற காலப்பகுதியில் அதனை நடத்துகின்ற நாடுகளில் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படும். இதன் மூலம் நாட்டுக்கும் தனி நபர்களுக்கும் வருவாயைப் பெற்றுக்கொள்வதற்காக அந்தந்த நாடுகள் பல வியாபார உத்திகளை வகுப்பது வழமை. அதே போன்று அடுத்த ஆண்டு உலகக்கிண்ண தொடரின் பெரும்பாலான போட்டிகளை நடத்தவுள்ள ஆஸ்திரேலியா மட்ச் ஆஸ்திரேலியா ஸ்போர்ட்ஸ் பிசினஸ் புரோக்ராம் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து போன்ற சில நாடுகளில் இருந்து வர்த்தகம், சுற்றுலா, கல்வி ஆகிய துறைகளில் அதிக முதலீட்டு வாய்ப்புகளை கிரிக்கெட்டின் மூலம் பெறுவதற்கு இந்தத் திட்டத்தை பயன்படுத்தவுள்ளது ஆஸ்திரேலியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - தெற்கு உறவுப் பாலத்தின் எதிர்காலத்திற்காய் சம்பத் வங்கியின் மற்றுமோர் தேசிய பங்களிப்பு!

சம்பத் வங்கி பொதுநல சேவையின் நிதிப் பங்களிப்புடன் 'தெற்கின் நண்பன்' வடக்கு ரயில் பாதை புனரமைப்புப் பணிகளின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ள நாவற்குழி புகையிரத நிலையத்தைப் போலவே சாவகச்சேரி மற்றும் நாவற்குழி சிறுவர் புத்தகசாலைகள் மற்றும் சிறுவர் பூங்காவைத் திறந்து வைத்து இன்று போல் நாளையும் எதிர்காலத்திலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தேசத்திற்கு அன்பளிப்புச் செய்கின்றோம்.

பொது மக்களின் நன்மைக்கு கரம் கொடுக்கவே நாம் ஒவ்வொரு காலடியையும் முன்னெடுத்து வைக்கின்றோம்.





புகையிரத நிலைய திறப்பு விழாவின்போது



புகையிரத நிலையத்தின் உட்புறத் தோற்றம்



A9 வீதியிலிருந்து புகையிரத நிலையத்தின் தோற்றம்



நாவற்குழி சிறுவர் பூங்காவை திறந்து வைக்கும்போது




சாவகச்சேரி மற்றும் நாவற்குழி சிறுவர் புத்தகசாலைகள் திறந்து வைக்கப்படும்போது



நாவற்குழி புகையிரத நிலைய நிர்மாணப் பணிகளின்போது



நாவற்குழி புகையிரத நிலைய புனரமைப்பிற்கு முன்



யுத்த காலத்தில் சேதமடைந்த நாவற்குழி புகையிரத நிலையம்

find us on

சம்பத் வங்கி

எதிர்காலத்தின் முன்னோடிகள்

0112 30 30 50 www.sampath.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிரைஸ் ஸ்தாபனத்தால், 2014 நவம்பர் 05 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org